# எனது புதிய ஊழியம்

---

# MY NEW MINISTRY

59-1115

ஞாயிற்றுக்கிழமை காலை, நவம்பர் 15, 1959

பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில்,
இந்தியானா, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 59-1115 - **எனது புதிய ஊழியம்**

சரி, சகோதரர் நேவில். நன்றி சகோதரர்களே.

2 காலை வணக்கம் நண்பர்களே.

இன்று காலை, கூடாரத்தில் (Tabernacle) இருப்பது நிச்சயமாக ஒரு பாக்கியம்.

3 சான் ஜோஸ், கலிபோர்னியாவில் இந்த வாரம் தொடங்கவிருக்கும் பெரிய கூட்டத்திற்காக நாங்கள் ஏற்கனவே ஆயத்தமாகி காத்திருக்கிறோம். கூட்டம் முடிந்த உடனே, நாங்கள் மேற்கு கடற்கரைக்குக் (West Coast) கிளம்புகிறோம்.

பின்னர் கர்த்தருக்குச் சித்தமானால், கோக்கனட் கார்டனில் (Coconut Gardens)

கிறிஸ்தவ வர்த்தகர்களுடன் சுமார் இரண்டு நாட்கள் இருப்போம்.

மேற்கு கடற்கரையில் கர்த்தருக்குள் ஒரு சிறந்த நேரத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

சான் ஜோக்கின் (San Joaquin) மற்றும் மேற்கு கடற்கரை பள்ளத்தாக்குகள் முழுவதிலும் உள்ள சங்கங்கள் மற்றும் எண்பத்திரண்டு சபைகள் இதற்கு ஆதரவளிக்கின்றன.

ஆகவே நாங்கள் அங்கே கண்காட்சித் திடலில் (fairgrounds) இருப்போம். உங்கள் நண்பர்கள் யாராவது, அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் அந்த கூட்டங்களில் கலந்து கொள்ள விரும்பினால், உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் சந்திக்க நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

4 நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் இதுவரை சென்ற கூட்டங்களிலேயே, இன்று காலை எனக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது.

ஏனென்றால், சம்பவிக்கப்போகும் ஏதோ ஒன்றின் தருவாயில் நாம் இருக்கிறோம் என்று நான் விசுவாசிக்கிறேன்.

நீண்ட காலமாகவே நான் இதை எதிர்நோக்கியிருந்தேன். தேவன் தம்முடைய பிள்ளைகளைச் சற்று மேலே உயர்த்தி உதவப்போகும் அந்தச் சம்பவத்தின் விளிம்பில் நாம் இப்போது இருக்கிறோம் என்று நான் விசுவாசிக்கிறேன்.

5 "வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்" என்று வேதம் சொல்லுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

6 தேவன் தமது சபைக்கு ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுத்து, அது உலகத்திற்குச் சாதாரணமான ஒன்றாக மாறும் வரை அவர்கள் அந்த ஆசீர்வாதத்தில் நகரும்போது, பின்னர் அவர்கள் அதை இகழ்ந்து பேசத் தொடங்குகிறார்கள்.

அப்போது தேவனுடைய ஆவியானவர் உள்ளே வந்து மீண்டும் ஒரு தரத்தை

(standard) உயர்த்துகிறார், அங்கே ஒரு எழுப்புதலோ அல்லது ஏதோ ஒன்று வெடித்துக் கிளம்புகிறது.

7 இந்நாட்களில் என்றாவது ஒரு நாள், தேவனுடைய ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை மீண்டும் பூமிக்கு அனுப்புவார் என்பதே நமது பெரிய நம்பிக்கையாக இருக்கிறது, அப்போது அது பூரணமானதாக இருக்கும். அதுவே உண்மையான தரமாக இருக்கும்.

8 இப்போது அவர்கள் சுவர்களைச் சுற்றிலும், கட்டிடத்தின் எல்லா இடங்களிலும் நின்று கொண்டிருக்கிறார்கள். நான் என் காரை நிறுத்தியபோது உள்ளே வந்து கொண்டிருந்த ஒருவரைச் சந்தித்தேன், அவரிடம்... நான் சொன்னேன், "நான் சாவியுடன் இதை இங்கேயே விட்டு விடுகிறேன், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இதை நகர்த்திக்கொள்ளலாம்."

9 அவர் சொன்னார், "சரி, நான் உள்ளே செல்ல முயன்றேன். நிற்பதற்கு எனக்கு இடமே கிடைக்கவில்லை."

10 ஒரு கூட்டத்திற்கு எங்கள் சபை மிகவும் சிறியது.

ஆனால் இன்று காலை கிளம்புகிறோம்... நாங்கள் இங்கே இருப்போம் என்றும், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க வருவோம் என்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்திருந்தோம்.

இப்போதுதான் நடந்துகொண்டிருக்கும் காரியங்களைப் பற்றி உங்களுக்குச் சில அறிவுறுத்தல்களைக் கொடுக்கிறேன்.

தேவனுடைய கிருபையினால், இன்று காலைக்காக அதனுடன் இன்னும் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

11 இப்போது, கர்த்தருடைய வருகை சமீப மாயிருக்கிறது, அது சீக்கிரம் என்று நாங்களும், எங்களுக்கு முன்னால் இருந்தவர்களும் பிரசங்கித்திருக்கிறோம்.

நாளுக்கு நாள் அது நெருங்கி வருகிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். நிச்சயமாக அது அப்படித்தான் இருக்கிறது.

ஆனால், இந்நாட்களில் ஒரு நாள், நீங்கள் அதை கடைசி முறையாகக் கேட்பீர்கள், பின்னர் கர்த்தராகிய இயேசு வருவார் என்று நாம் நின்று யோசித்துப் பார்த்தால்.

12 பூமி முழுவதும், மரங்கள், அனைத்து இயற்கையும், மக்களும், சபையும், அனைத்தும் முனகிக் கொண்டும், அழுதுகொண்டும், பற்றிக் கொண்டும், அந்த நாளுக்காக, அவருடைய வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.

அப்போது தன் வேதனை நின்றுவிடும் என்று இயற்கைக்குத் தெரியும். அப்போது தங்கள் துன்பம் நீங்கும் என்று மக்களுக்கும் தெரியும்.

மரணம் அதன் கடைசிப் பிடியை இழக்கும், கல்லறையும் நரகமும் ஜெயத்தினால் விழுங்கப்படும்.

13 செல்லர்ஸ்பர்க்கிலிருந்து வந்து நமக்காக இசைத்து, பாடிய இந்தச் சிறிய போதகரை இன்று காலை சந்தித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

அங்கே நடந்து கொண்டிருக்கும் எழுப்புதலைப் பற்றிச் சகோதரர்களில் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்.

அவர்கள் ஏற்கனவே அதை அறிவித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன், அது மிகவும் நல்லது.

தேவனுடைய ராஜ்யத்திற்காக, அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக என்பது எனது உண்மையான ஜெபம்.

14 இப்போது, கர்த்தருடைய வார்த்தை நமக்கு மிகவும் அருமையானது. அது நமக்குத் தெரியும்.

ஆகையால் இன்று, நாம் கர்த்தருடைய வருகைக்கு மிக நெருக்கமாக இருக்கிறோம் என்றும், அறுவடைக்கான வயல்கள் மிகவும் தேவையுடன் இருக்கின்றன என்றும் நான் விசுவாசிக்கிறேன்.

15 நான் சில சகோதரர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

எனது ஊழியத்தின் பெரும்பகுதி இப்போது கடல் கடந்த தேசங்களுக்காகக் குறிக்கப் பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

கிறிஸ்துமஸ் முடிந்த உடனே ஆப்பிரிக்காவுக்கும், அங்கிருந்து ஆஸ்திரேலியா மற்றும் பல இடங்களுக்கும் செல்லத் திட்டமிட் டுள்ளோம்.

கர்த்தர் இப்போது அசைவாடிக் கொண்டிருக்கிறார் மற்றும் எங்களுக்கான வழிகளைத் திறக்கிறார்.

நீண்ட காலமாகவே, உலகம் முழுவதி லுமிருந்து எங்களுக்கு அழைப்புகள் வந்துள்ளன.

நீங்கள் எங்களுக்காக ஜெபித்தால், கிறிஸ்துமஸ் முடிந்த உடனேயே எங்களால் அதை மேற்கொள்ள முடியும்.

16 இப்போது என் முன்னே தேவனுடைய வார்த்தை திறந்திருக்கிறது.

நான் பக்கங்களைத் திறந்திருக்கிறேன், ஏனென்றால், சரீரப்பிரகாரமாகவும், தேவனு

டைய உதவியினாலும், வேதத்தைத் திறக்க என்னால் முடியும்.

ஆனால் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள வற்றைத் திறக்க என்னால் முடியாது. அதைச் செய்யக்கூடியவர் ஒருவர் மட்டுமே இருக்கிறார், அது தேவன் மட்டுமே.

அவரே தமது பரிசுத்த ஆவியின் மூலமாக அதை எழுதியவர், வேதத்தை நமக்குத் திறக்கக்கூடியவர் அவர் மட்டுமே.

நாம் அதை வாசிக்கும்போது அவர் நம் இருதயங்களைத் திறப்பார் என்றும், அதை நமக்குத் தெரியப்படுத்துவார் என்றும் நான் நம்புகிறேன்.

17 இன்று காலை நான் சுருக்கமாக இருப்பேன். முதலாவதாக, எனது ஊழியத்தின் மாற்றம் குறித்து கடந்த சில நாட்களில் என்ன நடந்தது என்பதை உங்களுக்குச் சொல்வதாக நான் உறுதியளித்தபடி செய்ய விரும்புகிறேன்.

பின்னர், என்னிடம் ஒரு சிறிய செய்தி குறிப்பு (text) உள்ளது, அதன்பின் நாம் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்போம்.

குளம் நிரம்பியிருப்பதைக் கண்டேன், எனவே ஞானஸ்நானம் இருக்கும் என்று நம்புகிறேன்.

18 ஆனால் நாம் மேலே செல்வதற்கு முன், இப்போது ஒரு கணம் ஜெபத்தில் தலை வணங்குவோம்.

இங்கே எத்தனை பேருக்குத் தேவன் தேவை என்ற உணர்வு இருக்கிறது, தேவனை நோக்கி உங்கள் கைகளை உயர்த்துவீர்களா?

மேலும் அப்படிச் செய்யும்போது, "ஆண்டவரே என்னை நினைவுகூரும். எனக்கு இன்னின்ன தேவைகள் உள்ளன" என்று சொல்லுங்கள். நாம் ஜெபிப்போம்.

19 ஓ ஆண்டவரே, அமைதியாக, நாம் தேவனுடைய பிரசன்னத்தில் அமைதியாக வர வேண்டும் என்பதை உணர்கிறோம்.

"ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்."

நாங்கள் ஆவியின் அமைதலோடு, ஓ தேவனே, உமது சிங்காசனத்தண்டை வருகிறோம்.

நாங்கள் எங்கள் இருதயங்களை உமக்கு முன்பாக உயர்த்தி, "ஓ ஆண்டவரே, அவற்றை ஆராய்ந்து பாரும்" என்று சொல்கிறோம்.

எங்களுக்குள் ஏதாவது அசுத்தமான காரியம் இருந்தால், ஆண்டவரே, மேற்கிற்கும் கிழக்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரத்திற்கு அதை அகற்றிவிடும்.

எங்கள் இருதயங்களில் ஏதாவது அக்கிரமம் இருந்தால், எங்கள் ஜெபங்கள் பதில் செய்யப் படுவதைத் தடுக்கும் ஏதேனும் இருந்தால், கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் எங்கள் ஆவியிலிருந்தும் எங்கள் இருதயத் திலிருந்தும் ஒவ்வொரு கறையையும் நீக்கும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஏனென்றால், "நான் என் இருதயத்தில் அக்கிரமத்தை சிந்தித்தால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" என்று எழுதப்பட்டுள்ளது.

கைகள் மேலே உயர்த்தப்பட்டதை நீர் கண்டீர், அது எங்கள் சரீரக் கண்களுக்கு, அவர்களின் இருதயத்தின் தேவையைக் குறிக்கிறது.

ஓ ஆண்டவரே, அவர்கள் ஒவ்வொருவருக்கும் நீர் பதில் அளிக்கும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். அநேகர் தேவையுடன் இருக்கிறார்கள்.

20 வரவிருக்கும் இந்த சான் ஜோஸ் கூட்டத்தை நீர் நினைவுகூரும்படி இன்று காலை மக்கள் சபையில் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

ஓ ஆண்டவரே, பனி மற்றும் ஐஸ் நிறைந்த நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்ய எங்கள் முன்னால் இருக்கையில் எங்களுக்கு உதவும்.

ஆனால் உமது மக்களுக்கு உதவவும், ஆண்டவரே, தொலைந்து போனவர்கள் உம்மைத் தங்கள் இரட்சகராகக் கண்டுகொள்ள உதவவும், பலவீனமானவர்களுக்கும் பார்வையற்றவர்களுக்கும் உதவவும், எங்களைப்

பின்தொடரும் மற்றவர்களுக்கு வழியைச் செம்மைப்படுத்தவும், எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய நாங்கள் கர்த்தருடைய நாமத்தில் செல்கிறோம்.

21 எங்கள் சிறிய சபையையும் அதன் போதகர், எங்கள் சகோதரர் நேவில், அனைத்து பொறுப்பாளர்கள் (trustees), உதவிக்காரர்கள் (deacons), விசுவாசிகள் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள அனைவரையும் ஆசீர்வதியும்.

அதுமட்டுமல்லாமல், இங்கே பிரதிநிதித் துவப்படுத்தப் பட்டுள்ள அனைத்து சபை களையும் ஆசீர்வதியும்.

செல்லர்ஸ்பர்க்கில் ஊழியம் செய்யும் அந்த இளைஞர்களுக்காக, ஆண்டவரே, உமது கரம் அவர்களுக்கு நேராக நீண்டிருக்கும்படி நாங்கள் கேட்கிறோம்.

செல்லர்ஸ்பர்க்கில் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமையான சபையை நீர் எழுப்புவீராக. அதை அருளும், ஆண்டவரே.

22 வியாதியஸ்தர்களைக் குணமாக்கும், பார்வையற்றவர்களுக்குப் பார்வையை அளியும், பலவீனர்களுக்குப் பலனையும், தேவையுள்ளவர் களுக்கு இரட்சிப்பையும் தாரும்.

23 இன்று காலை, நாங்கள் உமது வார்த்தையை வாசிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் வந்து, வார்த்தைக்குள் சென்று அதை எங்கள் இருதயங்களில் உயிர்ப்பிப்பாராக.

24 ஞானஸ்நானம் பெறவிருப்பவர்களை ஆசீர்வதியும். அவர்கள் தண்ணீரிலிருந்து எழும்பும்போது, தேவனுக்கு மகிமை செலுத்தி, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவார்களாக.

ஆண்டவரே, உமக்கு மகிமை உண்டாவதாக.

25 எங்கள் ஆத்துமாக்களையும் எங்கள் எண்ணங்களையும் சுத்திகரிப்பதற்காக இன்று காலை நாங்கள் கூடிவந்திருக்கிறோம், உம்மைச் சேவிக்க முன்னெப்போதையும் விட அதிக உறுதியுடன் இன்று காலை இந்த கூடாரத்தை விட்டு வெளியேறுவோமாக.

"ஓசன்னா! ஓசன்னா!" என்று கோடிக் கணக்கானோர் பாடிக்கொண்டிருக்கும் உமது சிங்காசனத்தைச் சுற்றி, மகிமையில் உள்ள உமது வீட்டில் நாம் சந்திக்கும் அந்த நாள் வரை, பரிசுத்த ஆவியினால் நெருக்கமாக இணைக்கப் பட்டு, கட்டப்பட்டு, ஒன்றாகக் கூடி வாழ்வோமாக.

ஒருவர் கூட இல்லாமல் போகாதபடி நாம் அனைவரும் அங்கே இருப்போமாக. அதை அருளும், ஆண்டவரே.

அதுவரை, எங்களை ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், உமது ஆவியினால் நிரப்பப்பட்டும், உமக்குச் சேவை செய்பவர் களாகவும் வைத்துக்கொள்ளும்.

இந்தக் காரியங்களை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

26 மாற்கு எழுதின சுவிசேஷம், 11-ம் அதிகாரம், 1-ம் வசனத்திலிருந்து நாம் இப்போது வாசிக்கும்போது கர்த்தர் ஆசீர்வாதங்களைக் கூட்டுவாராக.

இந்தச் சிறிய மேற்கோள் அல்லது புத்திமதிக்குப் பிறகு, நான் எனது செய்திக்குச் செல்வேன்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவதற்காக இதை வாசிக்கிறேன்.

**அவர்கள் வந்தபோது...**

27 என்னை மன்னிக்கவும். நேரத்தைச் மிச்சப்படுத்த, 11-ம் அதிகாரத்தின் 10-ம் வசனத்திலிருந்து, 10-ம் வசனத்திலிருந்து தொடங்க விரும்புகிறேன்.

**கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதுடைய ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா என்று சொன்னார்கள்.**

**இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து, சகலவற்றையும் சுற்றிப்பார்த்து, சாயங்காலமானபோது... பன்னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப் போனார்.**

**மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.**

அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அவர் அதினிடத்தில் வந்தபோது, இலைகளை யல்லாமல் வேறொன்றையும் காணவில்லை; அது அத்திப்பழக்காலமாயிருக்கவில்லை.

இயேசு அதை நோக்கி: இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்; அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்.

அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, தேவாலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்தி விட்டு, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து,

யாதொருவன் தேவாலயத்தின் வழியாய்ப் பண்டங்களைக் கொண்டுபோகவொட்டாமல் தடுத்து;

அவர்களுக்கு உபதேசித்து: என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு, ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டபடியினால் அவருக்குப் பயந்திருந்தபடியால், அவரைக் கொலைசெய்யும்படி வகைதேடினார்கள்.

சாயங்காலமானபோது அவர் நகரத்தை விட்டுப் புறப்பட்டுப்போனார்.

மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய் வருகிறபோது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார்கள்.

பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபி, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவை களைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசி யுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

28 *எப்பேர்ப்பட்ட கிருபையுள்ள வாக்குத் தத்தம்! இது முற்றிலும் சத்தியம்.*

*இது என்னை திக்குமுக்காடச் செய்தது, அல்லது நீண்ட காலமாக நான் அந்த வெளிப்பாட்டைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். "அது எப்படி இருக்க முடியும்?"*

29 *பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் முதன்முதலில் கூடாரத்தில் பிரசங்கிக்கத் தொடங்கியபோது, நரகம்* (Hell) *என்ற வார்த்தையை எதிர்கொண்டேன்.*

*நான் பல முறை, அதற்கான குறிப்புகளைப் பார்த்தேன், அது கிரேக்க மொழியில் ஹேடிஸ்* (hades) *என்று குறிப்பிடப்பட்டிருந்தது, அதாவது "கல்லறை" என்று பொருள்படும்.*

*நியாயத்தீர்ப்பு நாளில் மனிதர்களின் ஆத்துமாக்களுக்குப் பொறுப்பேற்க நான்*

விரும்பாததால், என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

எனவே சத்தியம் என்ன என்பதைக் கண்டுபிடிக்கும் வரை நான் அதைத் தேடினேன், தேடினேன்.

சுமார் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாக, நரகத்தைப் பற்றிய சத்தியம் என்ன என்பதைக் கண்டுபிடிக்கும் வரை நான் அந்தத் தலைப்பைத் தொடவில்லை.

30 இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாராலும் இவ்வளவு பெரிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்ததால், இந்த வேதவசனம் என்னை இன்னும் அதிகமாகத் திகைக்க வைத்தது.

அவர் தம் சீஷர்களிடம், "நீங்கள் எவைகளைச் சொல்கிறீர்களோ, அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ' என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், நீங்கள் சொன்னது நடக்கும் என்று விசுவாசித்தால், நீங்கள் சொன்னதை

நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்" என்று சொன்னபோது.

ஓ, அந்த வார்த்தைகளை நாம் எடை போட்டுப் பார்க்க முடிந்தால்! "நீங்கள் சொல்வதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். நான் சொல்வதையல்ல, ஆனால் நீங்கள் சொன்னதை. நீங்கள் சொன்னதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்."

31 பல ஆண்டுகளாக, நான் அதிலேயே நிலைத்திருந்தேன். ஒவ்வொரு அகராதி மற்றும் விரிவுரை, ஒவ்வொரு மொழிபெயர்ப்பு, டூவே (Douay) பதிப்பு வரை நான் சென்றேன்.

ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரும் அதை, "நீங்கள் சொல்வதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்" என்றே மொழிபெயர்க்கிறார்கள்.

எனவே, அது வேதத்தில் எழுதப் பட்டிருந்தால் எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரை, எல்லா வேதவசனங்களும் சத்தியம்.

என்னால் அதைச் சரியாகப் பகுக்க முடியாவிட்டாலும், அது சத்தியம்தான்.

32 எனவே, நாம் சில காரியங்களைப் பார்க்க வேண்டிய நேரம் வரும்போதுதான் தேவன் அவற்றை நமக்குக் காண்பிக்கிறார் என்று நான் சில நேரங்களில் நம்புகிறேன்.

அவர் இந்த ஆசீர்வாதங்களை நிறுத்தி வைத்திருக்கிறார். இன்று நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை, நம் முன்னோர்கள் அனுபவிக்கவில்லை. அது அவர்களுக்கான பருவம் அல்ல.

33 நான் ஆலையிலிருந்து, ஜெபித்துவிட்டு இதே மேசைக்குத் திரும்பி வந்த அந்த இரவில், பரிசுத்த ஆவியானவர்... "முடவர்கள் நடப்பார்கள், குருடர்கள் பார்ப்பார்கள், ராஜாக்களும் மன்னர்களும் ஜெபத்திற்காக அழைப்பார்கள். கர்த்தருடைய வருகைக்கு முன்பாக, உலகம் முழுவதும் பரவக்கூடிய ஒரு எழுப்புதல் சகோதரர்களுக்குள் தொடங்கும்" என்று அவர் தமது ஆவியினால் எனக்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார் என்பதை இங்கே அமர்ந்திருக்கும் உங்களில் பலரிடம் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது.

34 அதை நம்புவது கடினமாக இருந்தது. அதை நம்புவது எனக்கே கடினமாக இருந்தது. ஆனால் அதுதான் நடந்தது.

அது அதைச் செய்தது. இன்று வரை, பரிசுத்த ஆவி எழுப்புதல் தீ உலகம் முழுவதும் பற்றி எரிகிறது: இந்தியா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா முழுவதும், மற்றும் எல்லா இடங்களிலும்.

ஆவியால் நிரப்பப்பட்ட பரிசுத்த ஆவி மனிதர்கள், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையின் எழுப்புதலால் உலகத்தை எரித்துக்கொண்டிருக்கிறார்கள்;

முடவர் நடக்கிறார்கள், குருடர் பார்க்கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், ஊமையர் பேசுகிறார்கள். தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதால் எல்லா விதமான அற்புதங் களும் நடக்கின்றன.

தேவனுடைய வாக்குத்தத்தம் உண்மை யானது.

35 நான் இதைக் குறித்து சிந்திக்கத் தொடங்கிய போது, என்னிடம் பேசிக்

கொண்டிருந்தவரிடம், "நான் தகுதியற்றவன்" என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

தேவன் ஒரு சிறிய, அக்கறையற்ற, படிப்பறிவில்லாத நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால், அதில், தேவன், ஒன்றுமில்லாத ஒன்றை, புறக்கணிக்கப்பட்ட ஒன்றை எடுத்துக்கொள்கிறார்.

36 அதுதான் தேவனுடைய மக்களை என்னை அவ்வளவாய் நேசிக்க வைக்கிறது. அவர்கள் அவர்களை "பரிசுத்தத்தினால் உருளுகிறவர்கள் (holy-rollers), அல்லது தகாதவர்கள்" என்று சொல்லிப் புறக்கணித் தார்கள்.

ஆனால் அப்போது தான் தேவன் அவர்களைத் தூக்கி எடுத்து அவர்களுடன் ஏதோ ஒன்றைச் செய்யத் தயாராக இருக்கிறார். அது அவருக்குப் பிரியமாயிருக்கிறது.

ஒன்றுமில்லாததை எடுத்து அதிலிருந்து எதையாவது உருவாக்குவது அவர் தேவன் என்பதைக் காட்டுகிறது.

என்னைப் போன்ற ஒரு பாவியைக் கர்த்தருடைய கரம் எடுத்து, ஒரு கிறிஸ்தவனாக மாற்றுகிறது.

37 திறமையைக் குறித்து நான் அவரிடம் கேள்வி எழுப்பினேன்.

நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று அவர் என்னிடம் சொன்னார்.

"மக்களை விசுவாசிக்க வை, உண்மையாக இரு, அப்போது ஜெபத்திற்கு முன்னால் எதுவும் நிற்காது" என்பதே அந்தக் கட்டளை.

இங்கே உங்களில் பலருக்கு அது நினைவிருக்கும். உலகம் முழுவதும் அது இலக்கியங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

38 "எனக்குக் கல்வியறிவு இல்லாதபோது நான் அதை எப்படிச் செய்ய முடியும்?" என்று நான் கேட்டேன்.

39 "மோசேக்குக் கொடுக்கப்பட்டது போல இரண்டு அடையாளங்கள் உனக்குக் கொடுக்கப் படும். அவற்றில் ஒன்று மோசேயின் கையைப் போன்றது, அவர் அதைத் தொழுநோயிலிருந்து

குணமாக்கும்படி மாற்றினார்" என்று அவர் சொன்னார்.

பின்னர் மக்களின் மீது என் கையை வைப்பது குறித்தும், அது தன்னை எப்படி வெளிப்படுத்தியது என்பது குறித்தும் அதே காரியம் நடந்தது.

பின்னர் அவர், "நீ அவர்களுடைய இருதயத்தின் இரகசியங்களை அறிந்து கொள்வாய்" என்றார்.

நான், "அதற்காகத்தான் நான் இங்கே இருக்கிறேன்" என்றேன்.

40 பின்னர் அவர் எனக்கு வேதவசனங்களை விளக்கினார்.

ஓ, அந்த நேரத்திலிருந்து, வேதம் எனக்கு ஒரு புதிய வார்த்தையாக மாறியது.

எனக்கு அதன் மீது ஒரு வித்தியாசமான பார்வை, ஒரு வித்தியாசமான நோக்கம் இருந்தது. ஏதோ ஒன்று நடந்தது.

41 பின்னர், சிறிது நேரம் கழித்து, அவர், "நீ உண்மையாக இருந்து, தாழ்மையுடன் இருந்து,

பணம் மற்றும் பொருட்களிலிருந்து விலகி இருந்தால், அது உன்னைத் தொடர்ந்து ஆசீர்வதிக்கும், நீ தொடர்ந்து மேலேறுவாய்" என்றார்.

42 உயர்ந்த பதவிகளில் ஏறும் மனிதர்களை நாம் எத்தனை முறை பார்க்கிறோம், அவர்கள் பெரிய பெயர்களைப் பெறுகிறார்கள், ஆனால் சில சமயங்களில் தேவன் அதை உயர்வு என்று அழைப்பதில்லை.

43 யோவான் பிரசங்கித்துக்கொண்டு வந்தபோது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

"பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும், மலைகள், குன்றுகள் எல்லாம் தாழ்த்தப்படும்" என்று வேதம் முன்னறிவித்தது. பார்த்தீர்களா?

அது வந்தபோது, அக்கினி ரதங்களுடன் பரலோகத்திலிருந்து வரும் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள்.

ஆனால் யோர்தான் நதிக்கரையில், தன்னைச் சுற்றி ஆட்டுத்தோலைத் போர்த்திக்கொண்டு பிரசங்கித்த ஒரு ஏழை மனிதனைத் தவிர வேறு என்ன இருந்தது.

சேற்று கரையில், ஒரு சபையில் கூட இல்லை, ஆனால் தேவன் அதை "பெரியது" என்று அழைத்தார்.

44 "ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் போலப் பெரியவன் ஒருவனும் இல்லை" என்று இயேசு சீஷர்களிடம் சொன்னபோது.

நீங்கள் எல்லா ராஜாக்களையும், தீர்க்கதரிசி யான தாவீதையும், சாலொமோனின் அனைத்து பெரிய சிறப்பையும் எடுத்துக்கொள்ளுங்கள், அவர்கள் யோவானைத் தொடக்கூட இல்லை.

ஆயினும், தலை சாய்க்கக்கூட அவனுக்கு இடமில்லை.

45 எனவே, தேவனுடைய பார்வையில் பெரியவராக இருக்க நீங்கள் இவ்வுலகில் பணக்காரராகவும் வல்லமை உள்ளவராகவும் இருக்க வேண்டியதில்லை.

உங்கள் இருதயத்தில் நீங்கள் தாழ்மையுடன் இருந்தால் மட்டுமே போதும். தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் அளவுக்குப் பெரியவராக

இருப்பவரையே தேவன் "மகத்துவம்" என்று அழைக்கிறார்.

எல்லாவற்றிற்கும் பழியை ஏற்றுக்கொண்டு, தன்னைத் தாழ்த்திக்கொள்பவனே பெரிய மனிதன். அதுவே மகத்துவம்.

46 தேவன் சொன்னது, முதல் முறையாக இங்கே பிரசங்கபீடத்திலிருந்து அறிவிக்கப் பட்டது, அது என்ன செய்யும் என்று சொல்லப்பட்டதோ அதை அப்படியே செய்தது என்பதை நாம் காண்கிறோம்.

அங்கே பெந்தெகொஸ்தே சபை எழும்பி, எழுப்புதலைப் பிடித்தது. இன்று, பெந்தெ கொஸ்தே சபை உலகிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் சபையாக உள்ளது.

கடந்த ஆண்டு அவர்கள் பதிவு செய்தனர்... இதில் நாங்களும், மற்றும் இந்தப் பிரிவினைகளுக்கு வெளியே உள்ளவர்களும் அடங்கமாட்டோம்... கடந்த ஆண்டு பதினைந்து லட்சம் (1.5 மில்லியன்) மனந்திரும்புதல்கள், இது மற்ற அனைத்து புராட்டஸ்டன்ட் மற்றும் கத்தோலிக்கத்தையும் உள்ளடக்கியது.

கத்தோலிக்கம் உலகம் முழுவதும் சுமார் நான்கு லட்சத்து எழுபத்தைந்தாயிரம், அது போன்ற மனந்திரும்புதல்களை மட்டுமே கொண்டிருந்தது என்று நான் நம்புகிறேன்.

ஆனால் பெந்தெகொஸ்தே பதினைந்து லட்சம் சென்றது. தேவன் தம்முடைய சபையை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

47 கல்வியறிவு இல்லாத, குறைந்த தகுதியுள்ள மனிதர்கள், ஆவியின் வல்லமையான அபிஷேகத்தில் எழும்பி, எந்தக் கல்வியும் அல்லது எதுவும் இல்லாமல் வெளியே சென்று, கிறிஸ்துவின் அளவிட முடியாத ஐசுவரியங்களை அறிவிக்கிறார்கள்.

அதுவே தேவனுடைய பார்வையில் பெரியது.

48 இந்த விஷயங்கள் அனைத்தும் தீப்பற்றி எரிவதையும், பரிசுத்த ஆவியானவர் தனது வார்த்தைக்கு உண்மையாக இருப்பதையும் நாம் கவனிக்கிறோம்.

49 மக்களின் கையைப் பிடித்து சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, கனடாவின்

ரெஜினாவில் உள்ள குயின் சிட்டியில் ஒரு நாள் இரவு, ஒரு மனிதர் மேடையின் குறுக்கே நடந்து வந்தார், அங்கே ஆவியானவருக்கு முன்பாக அவருடைய வாழ்க்கை திறந்த புத்தகமாக இருந்தது.

அவர் வாக்குத்தத்தம் செய்தபடியே, அங்கே பகுத்துணருதல் (discernment) இருந்தது. அது உலகம் முழுவதும் சென்றுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் அதைப் பற்றித் தெரியும் அளவுக்கு, பல மொழிகளில், உலகம் முழுவதும் இது அச்சிடப்பட்டுள்ளது.

அப்போது எதிரி உள்ளே வந்து அதைக் கேலி செய்து, "இது மனதை வாசிப்பது (mind reading)" என்று சொன்னான்.

அதன் போலச் செய்தல்களும் (impersonations), மற்ற எல்லாமும் வந்தன. ஆனால் இவை அனைத்திற்கும் நடுவே, தேவன் அப்படியே தொடர்ந்து நகர்ந்தார். தேவன் தனது உண்மையான வாக்குத்தத்தத்திற்கு உண்மையாக இருந்தார்.

அவர் ஒவ்வொரு முறையும் அப்படியே இருப்பார்.

50 பின்னர், ஒரு நாள் நான் டேல் ஹாலோவிற்கு (Dale Hollow) வுட் மற்றும் அவரது சகோதரருடன் மீன் பிடிக்கச் சென்றிருந்தேன்.

அவர்கள் யெகோவா சாட்சிகளாக (Jehovah Witnesses) இருந்தவர்கள், அப்போதுதான் மனந்திரும்பி விசுவாசத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள்.

நாங்கள் கரையை ஒட்டி மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது... அந்தக் கதையை நான் பலமுறை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

அங்கே மிஸ்டர் வுட், பேங்க்ஸ் வுட், இப்போது இங்கே நமது பொறுப்பாளர்களில் ஒருவராக இருப்பவர், அவர்களுக்கு வெண்ணெய் தடவிய வீட்டில் செய்த ரொட்டித் துண்டைக் கொடுக்கும் ஒரு வயதான சகோதரியைப் பற்றிச் சொன்னார்.

அவர் தேவனுடைய சபையைச் சேர்ந்தவர். அவர் தன் சகோதரனிடம், "லைல், நாம்

இரட்சிக்கப்பட்டோம் என்று அவளிடம் போய் சொல்ல வேண்டும்" என்றார்.

51 உங்களுக்குத் தெரியும், நாம் சொல்லக்கூடிய சில விஷயங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக்கொள்ளும்.

நாம் அந்த விஷயத்தைச் சொல்லும்போது, சில விஷயங்கள் அவருக்கு மிகவும் பிரியமாக இருக்கும்.

"நீங்கள் சொல்வதை" கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்ன சொல்வது என்று நாம் கண்டுகொண்டால்! உங்கள் வார்த்தைகள் உங்களை நியாயந்தீர்க்கின்றன.

உங்கள் வார்த்தைகள் உங்களை ஆக்கினைக்குள்ளாக்கும், அல்லது உங்கள் வார்த்தைகள் உங்களை ஆசீர்வதிக்கும்.

52 அறியாமலே, பேங்க்ஸ் சரியான விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டும்.

அவர் அதைச் சொன்ன மாத்திரத்தில்...

53 நான் படகின் பின்புறத்தில் அமர்ந்து, தூண்டிலில் இரைக்காகப் போடுவதற்காக சிறிய

நீல நிற மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்தேன், ஏனென்றால் எங்களிடம் இரை தீர்ந்துவிட்டது.

நான் இந்தச் சிறிய மீன்களைப் பிடித்து வாளியில் போட்டுக்கொண்டிருந்தேன்.

54 பேங்க்ஸ் அதைச் சொன்னபோது, திடீரென்று ஏதோ ஒன்று என்னைத் தாக்கியது. அவர் சரியான விஷயத்தைச் சொன்னார்.

பரிசுத்த ஆவியானவர் வெளிப்பட்டு, "**கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்.** அடுத்த சில மணிநேரங்களில், ஒரு சிறிய பிராணியின் உயிர்த்தெழுதல் இருக்கும் என்பதை நீ காண்பாய்" என்று சொன்னார்.

என் சிறு பையன் மிகவும் கடினமாக அழுத்தியதால் மூச்சுத் திணறி, நாங்கள் கிளம்புவதற்கு முன்பு தரையில் போட்ட அந்தப் பூனைக்குட்டியாக அது இருக்கும் என்று நான் நினைத்தேன்.

அதுவாகத்தான் இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் எங்களுக்கு ஆச்சரியமாக, மறுநாள் காலையில், நாங்கள் படகில் அமர்ந்திருந்தபோது...

55 பேங்க்ஸ் இங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். லைல்... லைல் இங்கே இருக்கிறாரா, பேங்க்ஸ்? அல்லது, லைல், நீங்கள் இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள். அவர் எப்போதும் எங்களுடன் வருவார்.

56 அவர்... ஒரு பெரிய தூண்டிலில் ஒரு மீனைப் பிடித்தார்.

அவர் ஒரு சிறிய, நீல நிற மீனைப் பிடித்தார், அது தூண்டிலை முழுவதுமாக விழுங்கியிருந்தது.

அவர் அந்தச் சிறிய மீனைப் பிடித்தார். வாயிலிருந்து தூண்டிலை எடுப்பதற்குப் பதிலாக, அது மிகவும் ஆழமாக மாட்டிக் கொண்டதால், அவர் அதை இழுத்தார்.

அவர் அதன் வயிறு, குடல் மற்றும் செவுள்கள் அனைத்தையும் அதன் வாயிலிருந்து வெளியே இழுத்தார்.

முந்தைய நாள் இரவு நாங்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தது போலவும், இரைக்காக நூறு அல்லது அதற்கு மேற்

பட்டவற்றை வெட்டியது போலவும், அவர் அதைத் தண்ணீரில் வீசினார்.

அந்தச் சிறிய மீன் நான்கு அல்லது ஐந்து முறை துடித்தது, அதன் சிறிய வாயை அசைக்க முயன்றது, ஆனால் அதனால் முடியவில்லை, ஏனென்றால் அது செவுள்கள் மற்றும் பலவற்றால் நிரம்பியிருந்தது.

லைல், "உன் கடைசி மூச்சு முடிந்தது சிறியவனே (You shot your last wad, little fellow)" என்று சொன்னார்.

நான் அதைப் பற்றி எதுவும் நினைக்காமல் மீன் பிடித்துக் கொண்டிருந்தேன்.

57 அப்போது, தேவன் காரியங்களை மிகவும் விசித்திரமாகச் செய்கிறார்.

திடீரென்று, அந்த மரங்களுக்கு மேலிருந்து ஏதோ ஒன்று கீழே வருவதை நான் உணர்ந்தேன்.

பரிசுத்த ஆவியானவர் கீழே இறங்கி, "எழுந்து நில். அந்தச் சிறிய மீனிடம் பேசு, அது மீண்டும் உயிர்பெறும்" என்று சொன்னார்.

அது அரை மணி நேரமாகச் செத்துக் கிடந்தது, களைகளுக்குள் மிதந்து சென்றது.

58 நான், "சிறிய மீனே, இயேசுவின் நாமத்தில் நான் உனக்கு ஜீவனைக் கொடுக்கிறேன்" என்று சொன்னேன்.

அந்தச் சிறிய மீன் திரும்பி, துள்ளி, தண்ணீரில் எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகச் சென்றது.

என்ன செய்வது என்று தெரியாமல் நான் அங்கே நின்றேன்.

சகோதரர் பேங்க்ஸ் வுட், "நாம் இங்கே இருப்பது நல்லது" என்றார்.

59 லைல், "அது என்னைக் குறித்தது, ஏனென்றால் நான் அந்த விஷயத்தை அதனிடம் சொன்னேன், 'உன் கடைசி மூச்சு முடிந்தது சிறியவனே'" என்றார்.

அவர் மிகவும் உற்சாகமடைந்தார்.

60 நான், "இல்லை, அது இல்லை" என்றேன். நான் லைலைத் தேற்ற முயன்றேன்.

"அது அப்படி இல்லை" என்று நான் சொன்னேன்.

பின்னர் இந்த வேதவசனம் மீண்டும் எனக்கு வந்தது.

61 ஜெபம் செய்ய வேண்டிய பட்டியலில் குறைந்தது நூறு மூளை முடக்குவாதமுற்ற குழந்தைகளும், லுகேமியா (leukemia), புற்றுநோய் மற்றும் காசநோயால் பீடிக்கப் பட்டவர்கள், பார்வையற்றவர்கள், செவிடர்கள் மற்றும் ஊமையர்கள் எனப் பலர் இருந்தனர்.

என் வீட்டில் பக்கம் பக்கமாக அவர்கள் நிறைந்திருக்கிறார்கள், ஒரு சிறிய, அற்பமான மீனின் மீது தனது வல்லமையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இரக்கமுள்ள தேவன் அதை அருளியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

62 ஆனால் அவர் தேவனாகவே இருக்கிறார். சிறிய அத்தி மரத்திற்குப் பதிலாக, வாசலில் இருந்த தொழுநோயாளிகள் மீது அவர் ஏன் தனது வல்லமையைப் பயன்படுத்தவில்லை?

அது எதைச் செய்ய வேண்டும்? அவர் அக்கறையுள்ளவர் என்பதை தேவன் காட்ட விரும்புகிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்.

அவர் அத்தி மரத்திற்கும் தேவன். அவர் மீனுக்கும் தேவன். அவர் சிருஷ்டிப்புக்கும் தேவன்.

அவர் எல்லாவற்றிற்கும் தேவன், அவர் ஆர்வமில்லாத அளவுக்குச் சிறியதோ அல்லது அற்பமானதோ எதுவும் இல்லை. நாம் சிறியவர்களாகவும் அற்பமானவர்களாகவும் இருந்தாலும், அவருக்காக ஏதோ ஒன்றைச் செய்வதில் தேவன் நம் மீது ஆர்வமாக இருக்கிறார் என்பதை இது நமக்குத் தெரிவிக்கும்.

அவர் தனது மகிமையை வெளிப்படுத்த விரும்புகிறார்.

63 அது என்னுடன் மிகவும் கடினமாக ஒட்டிக்கொண்டது, என்னால் இரவும் பகலும் ஓய்வெடுக்க முடியவில்லை.

அது நடந்து இரண்டு வருடங்கள் ஆகிறது, தொடர்ந்து அது என்னைத் தொந்தரவு செய்தது.

நான் சொன்னேன், "ஓ, என்னால் அதைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது, ஏனென்றால் என்னால் அதைப் பாவநிவாரணத்தில் (Atonement) வைக்க முடியவில்லை. 'நீங்கள் எதைச் சொன்னாலும், அது நடக்கும். நீங்கள் சொல்வதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்'."

நான் இதே பிரசங்கபீடத்தில நின்று, முயற்சி செய்து, வேதவசனத்தை ஓடவிட்டேன்;

ஆனால் அதைப் பயன்படுத்தப் பயந்ததால், அதைத் தவிர்த்து, திரும்பிச் சென்றேன்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் உங்களால் விசுவாசிக்க முடியாது.

64 சில காலத்திற்கு முன்பு ஒருவர் என்னிடம் வந்து, "சகோதரர் பிரான்ஹாம், ஒரு கிறிஸ்தவர் புகையிலை பிடிப்பது தவறென்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

65 நான், "என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்?" என்றேன்.

உங்கள் மனதில் ஒரு கேள்வி இருந்தால், அதை விட்டுவிடுங்கள். ஒருபோதும் வேண்டாம்...

66 நீங்கள் செய்வது சரி என்று நீங்கள் முழுமையாக உறுதியாக இருந்தால் ஒழிய உங்களால் விசுவாசிக்க முடியாது.

எல்லா நிழல்களும் விலகிய பிறகு, நீங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்க முடியும்.

67 நான் பேசுவது என்னவென்று தெரியாமல், என்னால் வெளியே சென்று அந்த வேதவசனத்தைப் பிரசங்கிக்க முடியவில்லை.

ஆனாலும், அது கர்த்தருடையது என்று எனக்குத் தெரியும். உங்களில் அநேகர் எனக்குச் சாட்சி கொடுப்பீர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்கேயோ ஏதோ ஒன்று இருக்கிறது என்று நான் இந்த மேடையிலிருந்து தொடர்ந்து சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

நான் எட்டப் பார்க்கிறேன். அது கைக்கு எட்டும் தூரத்தில் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். என்னால் அதைப் பற்றிக்கொள்ள முடியவில்லை என்று தோன்றுகிறது.

"நான் அங்கே ஒரு வேதவசனத்தை இடித்தேன், என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை" என்று நான் சொல்வேன்.

68 ஏனென்றால், வேதவசனங்கள், ஓ, நீங்கள் ஒரு விளக்கத்தைக் கொடுக்கலாம். யாராவது என்னிடம் கேட்டால், நான் அவர்களிடம் ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டு, விலகிச் சென்று, அதை வேறு எதிலாவது திருப்பியிருப்பேன்.

ஆனால் பிரச்சினையை எதிர்கொள்ள... பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் சரியா தவறா என்ற பிரச்சினையை நாம் எதிர்கொள்ள வேண்டியது போல?

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா என்ற பிரச்சினையை நாம் எதிர்கொள்ள வேண்டும்?

இது சரியா தவறா? நாம் அதை எதிர்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை எப்போதும் சத்தியம் என்பதை நாம் அறிய வேண்டும்.

69 இப்படியே அது ஏறியும் இறங்கியும் சென்றது. நான் அதை என் மனதில் கொள்வேன், என்னால் அதை விலக்க முடியவில்லை.

நான் எங்கு சென்றாலும், அது தொடர்ந்து எனக்கு வரும், "நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ' என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், நீங்கள் சொன்னது நடக்கும் என்று விசுவாசித்தால், நீங்கள் சொன்னதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்."

70 "ஆண்டவரே, அது எப்படி இருக்க முடியும்? அதைச் சொல்வது நானாக இருப்பேன். நான்... அது எந்தப் பலனும் அளிக்காது, ஏனென்றால் அதைச் சொல்வது நானாக இருப்பேன். எனவே, நீர் சொன்னதைத் தவிர வேறு எதையும் என்னால் சொல்ல

முடியாது. நான் வேதவசனங்களின்படி அதைச் சொல்கிறேன்" என்று நான் நினைத்தேன்.

71 எல்லா காரியங்களும் பாவநிவாரணத்தில் (Atonement) தங்கியுள்ளன. பாவ நிவாரணத்திற்கு வெளியே எந்த ஆசீர்வாதங்களும் இல்லை.

ஏனென்றால், பாவநிவாரணத்திற்கு வெளியே நாம் பாவிகளாக இருக்கிறோம். அது எல்லோருக்கும் பொதுவான விஷயமாக இருந்தால், எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள்.

ஆனால் பாவநிவாரணத்தின் ஆசீர்வாதங்களைப் பற்றிய உங்கள் மனப்பான்மைதான் ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொண்டு வருகிறது.

72 இரட்சிப்பைப் போல, தேவனைப் பொறுத்தவரை, இயேசு மரித்தபோதே நான் இரட்சிக்கப்பட்டேன்.

ஆனால் அவர் தேவனுடைய குமாரன் என்றும், நான் அவரை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன் என்றும் எனக்கு வெளிப்

படுத்தப்படும் வரை அது எனக்கு எந்தப் பலனும் அளிக்காது.

ஒவ்வொரு வேதவசனமும் அதே வழியில் இருக்கிறது.

73 தெய்வீக சுகம் உங்களுக்கானது என்று தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தினால், அது உங்களுக்கானது.

ஆனால் நீங்கள் அதில் இடறலடைய முடியாது. அது வெளிப்பாட்டின் மூலம் வர வேண்டும்.

"அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமாக்கப்பட்ர்கள்" என்பது வெளிப் படுத்தப்படும் போது, சாத்தானால் எதுவும் செய்ய முடியாது.

74 செல்லர்ஸ்பர்க்கைச் சேர்ந்த நமது இளம் சகோதரர் சொன்னது போல், "எல்லா பிசாசுகளாலும் அதை அசைக்க முடியாது," நிச்சயமாக, ஏதோ ஒன்று வெளிப் படுத்தப்படும்போது.

75 கவனியுங்கள். கடந்த இலையுதிர் காலத்தில், அநேகர் என்னிடம், "நீங்கள் வீட்டில் இருக்கும்போது, ஏன் ஒவ்வொரு காலையிலும் உங்கள் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வேட்டையாட காட்டிற்குச் செல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

76 அவர் நகரத்தின் தேவனாக இருப்பதை போலவே காடுகளின் தேவனாகவும் இருக்கிறார் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அவர் இங்கே இருப்பதைப் போலவே அங்கேயும் தேவனாக இருக்கிறார்.

தாவீது ஒரு மேய்ப்பனாக இருந்ததால், அமர்ந்த தண்ணீர்கள் மற்றும் பசும்புல் மேய்ச்சல்களின் மூலமாக தேவன் அவரோடு இடைபட்டது போல, தேவன் எப்போதும் மனிதர்களுடன் அவர்களின் திறனுக்கு ஏற்றவாறும், எதன் மூலமாகவும் இடை படுகிறார்.

அவர் வெளிப்படுத்துவதற்கு வெவ்வேறு வழிகளைக் கொண்டிருக்கிறார்.

77 நான் காலையில் எழுந்து, அதிகாலையில், சுமார் நான்கு மணிக்கு, அணில் வேட்டையாட காட்டிற்குச் செல்வேன்.

என் மனைவி கூட என்னிடம், "பில்லி, வேட்டையாடச் செல்வதில் உனக்கு ஒருபோதும் சோர்வு ஏற்படாதா?" என்று கேட்டாள்.

பாருங்கள், இந்தப் போர் தனியாகவே வெல்லப்படுகிறது. என் மனைவிக்கு அது புரியவில்லை. எனக்கு அது புரியவில்லை. ஆனால் அது ஒரு போராட்டம்.

நீங்கள் தனியாக நிற்க வேண்டும். யாருடைய துணையும் உங்களுக்கு இருக்காது. உங்களுக்கும் இயேசுவுக்கும் மட்டுமே இடம் இருக்கிறது. தவறாகப் புரிந்து கொள்ளப் படுகிறீர்களா? நிச்சயமாக.

78 அங்கே என் சிறுமி ரெபெக்கா கூட. அவள், "நான் எப்போதாவது ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால், அவர் வேட்டையாடச் செல்வதைப் பற்றிக் குறிப்பிட்டால் கூட, நான் அவரைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்" என்றாள்.

"என் அம்மா என்ன அனுபவித்தார் என்று எனக்குத் தெரியும். கணவர் வெளியேறி, கூட்டங்களுக்குச் சென்றுவிடுவார்; வீட்டிற்கு வந்தவுடன், பழைய துப்பாக்கி அல்லது மீன்பிடித் தூண்டிலை எடுத்துக்கொண்டு, காட்டிற்குச் சென்றுவிடுவார்" என்றாள்.

79 நான், "அவர் அதைச் செய்வதை நீ விரும்புவாயா, அல்லது சீட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு அல்லது ஏதாவது ஒரு பெண்ணுடன் வெளியேறுவதை விரும்புவாயா? இப்போது நீயே ஒரு முடிவெடுத்துக்கொள்" என்றேன்.

80 அன்று நான் திரும்பி வந்தபோது, அவள், "அப்பா, அதற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன். உங்களைப் போல வேட்டையாட விரும்பும் ஒருவரைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன், பின்னர் நானும் அவருடன் வேட்டையாடுவேன்" என்றாள்.

அவள், "நான் அவருடன் வெளியே செல்வேன்" என்றாள்.

81 நான், "சரி, அதுவும் நல்லதுதான். இதைப் பற்றி நீ உன் அம்மாவிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றேன்.

82 ஆனால் காட்டில் ஏதோ ஒன்று இருக்கிறது. நான் முதன்முதலில் தேவனைப் பற்றி அறிந்தபோது, நான் மனந்திரும்ப விரும்பினேன்.

எனக்கு எப்படி மனந்திரும்புவது என்று தெரியவில்லை. அவரிடம் எப்படிப் பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை.

எனவே, நான் உட்கார்ந்து, அவருக்கு ஒரு கடிதம் எழுதி, என்னை மன்னிக்கும்படி கேட்டேன்.

அதை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. காட்டில் நான் ஏதோ ஒன்றை உணர்ந்தேன் என்று எனக்குத் தெரியும், எனவே நான் அவரைப் பார்த்த இடத்தில் அவர் காட்டின் வழியாகக் கீழே வரும்போது, அவர் இதைப் படித்து, நான் அவரைச் சேவிக்காததற்காக வருந்துகிறேன் என்பதையும்,

அவர் என் பாவத்தை மன்னிக்க வேண்டும் என்று நான் விரும்புவதையும் புரிந்துகொள்வார் என்று சொல்லி அதை ஒரு மரத்தில் அடித்தேன்.

83 பின்னர் நான் என்னைக் குறித்து வெட்கப்பட்டு, அதை எடுத்துக்கொண்டேன்.

"அவர் ஒரு மனிதராக இருந்தால், ஒரு மனிதனைப் போலப் புரிந்துகொள்வார். அவர் என் சிருஷ்டிகர்" என்று நான் சொன்னேன்.

நான் கொட்டகைக்குச் சென்று ஒரு மனிதனிடம் பேசுவது போல் அவரிடம் பேச ஆரம்பித்தேன், அவர் ஒரு மனிதனைப் போல எனக்குப் பதில் அளித்தார்.

பிறகு அது...

84 நான் சில தேதிகளை இங்கே குறித்து வைத்திருக்கிறேன்.

அக்டோபர் 12-ம் தேதி... 15-ம் தேதி, வயோமிங்கில் மான் வேட்டைப் பருவம் தொடங்கியது.

12 ஆம் தேதி நான் வேட்டையாடக்கூடிய கடைசி நாள், நாங்கள் 12-ம் தேதி கிளம்பவிருந்தோம்.

அதாவது, 10-ம் தேதி நாங்கள் காட்டில் இருந்தோம், அது ஒரு சனிக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை, நான் பிரசங்கித்தேன், அது 11-ம் தேதி.

திங்கட்கிழமை, சகோதரர் சோத்மன் மற்றும் சகோதரர் ராபர்சன் மற்றும் நாங்கள் அனைவரும் கூட்டத்திற்காக, அல்லது வயோமிங்கில் மான் வேட்டைக்காகக் கிளம்பினோம்.

அன்று காலை, 10-ம் தேதி... பின்னர், 18-ம் தேதி, இந்தியானாவில் பருவம் முடிவடையும், எங்களுக்கு அணில் வேட்டை இருக்காது.

85 எனவே நான், "நான் வெளியே செல்லக்கூடிய கடைசி முறை இதுவாகத்தான் இருக்கும்" என்று சொன்னேன்.

நாங்கள் ஒரு குழுவாகக் கூடி, நான் அவர்களைக் காட்டைச் சுற்றிப் பிரித்துவிட்டேன்.

நான் சேலத்தில் (Salem) எனக்குப் பிடித்த இடத்திற்கு வெகு தூரம் சென்றேன். பருவம் முடிவடையும் நேரம். அணில்கள் குறைவாகவே இருந்தன.

நான் பலமுறை வெளியே சென்று, ஒரு நேரத்தில் ஒரு அணிலை மட்டுமே பிடித்திருந்தேன்.

86 எனவே, இன்று காலை, நான் அதே காட்டிற்குச் சென்றேன், காற்று வீசத் தொடங்கியது.

வேட்டையாடும் எவருக்கும் அது ஒரு மோசமான காலை என்று தெரியும். நான் ஒரு அணிலைக் கூடப் பார்க்காமல், அல்லது ஒன்றின் சத்தத்தைக் கூடக் கேட்காமல் காடு முழுவதும் வேட்டையாடினேன்.

நான் ஒரு ஓடையின் அடிப்பகுதிக்குச் சென்று, மற்றொரு சிறிய காட்டுப் பகுதியைக் கண்டுபிடிக்க மேலே செல்ல ஆரம்பித்தேன்.

நான் இந்தச் சிறிய காட்டின் அருகே வந்தபோது, நிறைய வால்நட் மரங்களும், லோகஸ்ட் மரங்களும் இருந்தன, இலைகள்

அனைத்தும் உதிர்ந்து, ஒரு வெறும் புதராக இருந்தது.

அவற்றின் அருகில், இரண்டு அத்தி (sycamore) மரங்கள் இருந்தன. பொதுவாக, அணில்கள் அத்தி மரங்களைச் சுற்றித் திரிவதில்லை.

ஆனால் அதற்கு நேராக மேலே, ஒரு அணில் காட்டின் வழியாக மேலே செல்வதை நான் பார்த்தேன், ஆனால் அது வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

87 "ஓ," நான் சொன்னேன், "வேட்டை யாடுவதில் எந்தப் பயனும் இல்லை. இங்கே மக்கள் வெளியே இருக்கிறார்கள், விவசாயிகள் சோளத்தை அறுவடை செய்கிறார்கள், இந்தச் சிறிய காட்டைச் சுற்றிலும். அணில்கள் இங்கே இருக்காது."

எனவே நான் இரண்டு மரங்களுக்கு இடையில் உட்கார்ந்து, என் கால்களை ஒன்றின் மேல் தூக்கி வைத்து, மற்றொன்றின் மேல் சாய்ந்து, மிதமான வெயிலில், "நான் ஒரு சிறிய தூக்கம் போடுவேன், பிறகு நான் திரும்பிச்

செல்லும்போது சகோதரர் பேங்க்ஸ், சகோதரர் சோத்மன் மற்றும் பையன்களை அழைத்துக்கொண்டு போவேன்" என்று நினைத்தேன்.

88 நான் அங்கே அமர்ந்திருந்தபோது... [சகோதரர் பிரான்ஹாம் இருமுகிறார்] (மன்னிக்கவும்.) நான் அங்கே மரத்தடியில் வசதியாக அமர்ந்து, மிதமான வெயில் என்மேல் பட்டுக்கொண்டிருந்தபோது, "நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ' என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், நீங்கள் சொன்னது நடக்கும் என்று விசுவாசித்தால், நீங்கள் சொன்னதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்" என்று ஏதோ ஒன்று சொன்னது.

89 நான் சொன்னேன், "சரி, இப்போது, அந்த வேதவசனம் மீண்டும் என் மனதில் இருக்கிறது."

"நான் மற்ற பையன்களை அழைத்துச் செல்ல இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது, அதனால் நான் அந்த வேதவசனத்தை தியானிக்கிறேன்" என்று சொன்னேன்.

"இப்போது, அது எப்படிப் பொருந்தும்?" என்று நான் சொன்னேன். "ஒரே வழி இதுவாகத்தான் இருந்திருக்க முடியும், அந்தச் சீஷர்கள் பாவநிவாரணத்திற்கு மறுபக்கத்தில் வாழ்ந்தார்கள். பாவநிவாரணம் பின்னர், சுமார் பல வாரங்களுக்குப் பிறகு, பாவநிவாரணம் செய்யப்படுவதற்கு முன்பாகச் செய்யப்பட்டது.

இயேசு தீர்க்கதரிசிகளுக்குச் செய்தது போல, பாவநிவாரணத்திற்கு மறுபக்கத்தில் அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார்."

90 நான் "தீர்க்கதரிசிகள்" என்று சொன்னபோது, ஏதோ ஒன்று மீண்டும் என்னைத் தாக்கியது. "தீர்க்கதரிசிகள் என்பவர்கள் என்ன?"

பின்னர் அவர் தீர்க்கதரிசிகளுடன் என்ன செய்தார் என்பதைப் பற்றி நான் சிந்திக்க ஆரம்பித்தேன்.

91 சிறிது நேரம் எனக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்த பிறகு, நான் சிந்தித்தபோது, அருகில் ஏதோ ஒன்று இருப்பதை நான் மிகவும் உணர்ந்தேன், நான் ஒருவருடன் பேசிக்

கொண்டிருந்தேன். "அது பாவநிவாரணத்தில் இருக்கிறது" என்று ஏதோ ஒன்று என்னிடம் சொன்னது.

ஏனென்றால் ஒரு ஆணும் அல்லது பெண்ணும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு சரணடைந்தால், தேவன் உள்ளே வந்து அவர்களின் குரலைப் பயன்படுத்துகிறார், அது மனிதன் பேசுவது அல்ல.

அவருக்குள் பேசுவது தேவன்."

"அது சரி" என்று நான் நினைத்தேன்.

92 ஏதோ ஒன்று என்னிடம், "நீ என்ன நினைக்கிறாய்... மேடையில் அந்தத் தரிசனங்களை நீ எப்படிப் பார்க்கிறாய்?

இங்கே வெளியே அந்தத் தரிசனங்களை நீ எப்படிப் பார்க்கிறாய்? அது என்ன?

ஒவ்வொரு முறையும் எழுத்துப்பூர்வமாக நடக்கும் ஒன்றை முன்னறிவிப்பது உன்னுடைய சொந்த ஞானம் என்று நீ நினைக்கிறாயா?

பேசுவது நீ என்று நினைக்கிறாயா? சில நேரங்களில்... பரிசுத்த ஆவியானவர் ஒரு

செய்திக்குள் வரும்போது, என்ன சொல்வது என்று உனக்குத் தெரியாதபோது, அப்போது பேசுவது என்ன?

ஒரு மனிதன் தனக்கு ஒன்றும் தெரியாத ஒரு மொழியில் பேசும்போது அது என்ன?

அதே மொழியை, அதைப் பற்றி எதுவும் தெரியாத ஒருவர் வியாக்கியானம் செய்வது என்ன?

அது தனிநபரா, அல்லது ஜீவனுள்ள தேவனுடைய ஆவியா?" என்று கேட்டது.

93 நான் சொன்னேன், "அது உண்மை. நான் அதைப் பார்க்கிறேன். பேசுவது தேவன். சபைக்குத் தேவையானது அவரிடம் ஒரு படி நெருங்குவதும், அவருடன் வாழ்வதற்கு ஒரு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையும்தான்."

94 நான் அங்கே உட்கார்ந்து, ஒரு கணம் அல்லது இரண்டு நிமிடங்கள் இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோது, நான் ஒருவருடன் பேசுவதை உணர்ந்தேன். "கேள். நீ விரும்புவதைச் சொல், அது நடக்கும்" என்று ஏதோ ஒன்று சொல்வதை நான் கேட்டேன்.

95 நான், "நீர் என்ன?" என்றேன்.

நான், "நான் யாருடன் பேசுகிறேன்? நீர் யார்? இந்தப் புதர்களில் நின்று என்னிடம் பேசும் அந்தக் குரலை நான் கேட்கிறேன், நீர் யார்? நீர் யார்? என்னிடம் பேசுங்கள்" என்று சொல்லி, நான் மிகவும் உற்சாகமடைந்து அந்த மரங்களுக்கு இடையிலிருந்து குதித்தேன். நான், "என்னிடம் பேசுங்கள். நீர் யார்? என்னால் உம்மைப் பார்க்க முடியவில்லை" என்றேன். அங்கே அந்த ஒளியைத் தேடினேன். என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. நான், "நீர் யார்? நீர் எங்கே இருக்கிறீர்? உமக்கு என்னிடம் என்ன வேண்டும்? ஆண்டவரே, நீர் எங்கே இருக்கிறீர்?" என்று அலறினேன்.

96 ஏதோ ஒன்று பின்னால் நகர்ந்து, "நீ விரும்புவதைச் சொல், அது உனக்குக் கொடுக்கப்படும்" என்று சொன்னது.

97 நான், "ஆண்டவரே, நீர் என் ஊழியத்தை மாற்றுகிறீரா? நீர் பேசிக்கொண்டிருந்த மாற்றம் இதுதானா?

இது இதற்குத்தான் வருகிறதா? இது இப்படித்தான் இருக்குமா?

தரிசனத்தில் நான் கண்ட அந்தச் சிறிய வீட்டில் இருந்த ஏதோ ஒன்று, இதுதானா?" என்றேன்.

98 அப்போது பரிசுத்த ஆவியின் மிக ஆழமான, இனிமையான அபிஷேகம் என்னை என் கால்களிலிருந்து மேலே தூக்குவது போல இருந்தது, "நீ விரும்புவதைச் சொல், அது உனக்குக் கொடுக்கப்படும்" என்று சொன்னது.

99 நான் திகைத்து நின்றேன். அது என்னை விட்டு நீங்கியது. என்னிடம் எதுவும் இல்லை.

"சரி, நான் என்ன சொல்ல முடியும்? இங்கே வியாதியஸ்தர்கள் யாரும் இல்லை. இங்கே எதுவும் இல்லை. நான் காட்டில் இருக்கிறேன். நான் என்ன சொல்ல முடியும்? என்ன—என்ன—நான் என்ன செய்ய முடியும்?" என்று நான் நினைத்தேன்.

"நான் என் சுயநலவை இழக்கிறேனா? நான் மிகவும் கடினமாகப் படித்ததால் என் மன ஆற்றல் சிதறுகிறதா?" என்று நினைத்தேன்.

100 அப்போது, நீங்கள் என்னைக் கேட்பது போலவே நான் அதைக் கேட்டேன், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், உன்னிடம் வேட்டைப் பொருள் இல்லையே?" என்று சொன்னது.

"நீ விரும்பும் எதையும் சொல்" என்று சொன்னது.

101 சரி, "சகலத்தையும் சோதித்துப் பாருங்கள் என்று தேவன் சொன்னார்" என்று நான் நினைத்தேன். நான், "கர்த்தராகிய தேவனே, அது நீர்தான் என்றால், அந்தத் தரிசனங்களிலிருந்து, நான் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஏதோ ஒரு பெரிய காரியத்திற்கு என் ஊழியத்தை நீர் மாற்றப்போகிறீர் என்பதற்கு இது ஒரு அடையாளமாக இருந்தால்," நான் சொன்னேன், "நீர் என் ஜெபத்திற்குப் பதில் அளிக்கும்படி அது சம்பவிக்கட்டும்."

ஒருவேளை இன்று கூடாரத்தில் அது மீண்டும் நடக்கும். அது நடக்கும் என்று நம்புகிறேன், ஆண்டவரே.

நீர் மக்களின் இருதயங்களில் விசுவாசத்தை வைப்பீர் என்றும், நான் தவறாக வழிநடத்தவில்லை அல்லது ஒரு காரியத்தைக் கூடத் தவறாகச் சொல்லவில்லை என்பதை அறிவீர்கள் என்றும் நம்புகிறேன்.

ஆண்டவரே, என் வார்த்தைகளைக் கவனித்து, அவற்றை எடைபோட்டு, எனக்குத் தெரிந்த வரையில், என் இருதயத்தில் உள்ளபடியே, அது வந்தபடியே நான் சொன்னேன்.

நான் சொன்னது போல, ஏழு முறை நீர் அதை எனக்கு உறுதிப்படுத்தியிருக்கிறீர் என்பதை அறிந்து.

அதற்குப் பிறகு உடனடியாக, நான் பேசிய முதல் மனிதப் பிறவி, அவள் பேசிய கணமே தன் இருதயத்தின் விருப்பத்தைப் பெற்றாள் என்பதை அறிந்து.

206 இப்போது, ஆண்டவரே, இன்று காலை இங்கே பல விருப்பங்கள் உள்ளன. ஆண்டவரே, நீர் உமது ஊழியனை அபிஷேகம் செய்ய வேண்டும்.

நீர் அபிஷேகத்தை அனுப்பினால்! இன்று காலை, எனக்கு அதைத் தாரும். யாருக்காவது தேவை இருந்தால், அவர்கள் பேசும்போது நீர் அதை என்னிடம் சொல்லும், ஆண்டவரே, அல்லது எப்போது, நீர் விரும்பும் யாராக இருந்தாலும்.

அது சம்பவிக்கட்டும்.

207 இப்போது, அப்போது சொல்லப்படுவது, அது நானாக இருக்காது, பேசுவது நீராக இருப்பீர், ஆண்டவரே என்பதை நான் அறிவேன்.

நான் என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன், நான் இந்த ஊழியத்திலிருந்து, பழைய வகையான தரிசனங்கள் மற்றும் பலவற்றிலிருந்து விலகுவதற்கு முன், நான் என் வாழ்க்கையைப் புதிதாக அர்ப்பணித்த இந்தப் பலிபீடத்தில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்ப திலிருந்து அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் வரை, சேவைக்காக இன்று காலை என்னை மீண்டும் உமக்கு அர்ப்பணிக்கிறேன்.

இது சொல்லப்படுவது இதுவே முதல் முறை. ஆண்டவரே, இது வெளிப்படுத்தப் படுவது இதுவே முதல் முறை. இங்கே சாட்சிகள் அமர்ந்திருக்கிறார்கள்.

208 ஓ கர்த்தராகிய தேவனே, என்னுடைய இந்தப் பழைய கூட்டை (hull) நீர் எதற்காவது பயன்படுத்த முடியுமானால், ஆண்டவரே நான் உம்முடையவன்.

என்னை எடுத்து, என்னை வார்த்து, என்னை உருவாக்கி, ஆண்டவரே, உம்மைக் கனம்பண்ணவும் மகிமைப்படுத்தவும் ஏதோ ஒன்றைச் செய்யும்.

மற்ற ஊழியர்களுக்குள்ளும் இதைப் பரப்பும். உலகின் நான்கு மூலைகளுக்கும் இதை அனுப்பும். நேரம் ஆகிவிட்டது. இயேசு வருகிறார்.

209 உமது மக்களை ஒன்றாக ஆசீர்வதியும். தொலைந்து போனவர்களை இரட்சியும். இன்று காலை இங்கே கைகளை உயர்த்திய அனைவரையும், ஆண்டவரே, அவர்களை இரட்சியும். அவர்களுக்குப் பரிசுத்த ஆவியைத் தாரும்.

அவர்கள் வாழ்க்கை உமக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்கட்டும்.

210 இந்தச் சிறிய சபை, ஆண்டவரே, போதகர் மற்றும் இங்கே உள்ள ஒவ்வொரு போதகர், ஒவ்வொரு சுவிசேஷகர், ஆசிரியர், வேறு எந்தச் சபையின் ஒவ்வொரு உறுப்பினர், ஓ தேவனே, ஒரு மக்கள் கூட்டமாக, நாங்கள் எங்களை உமக்குக் கொடுக்கிறோம். எங்களை

எடுத்துப் பயன்படுத்தும், ஆண்டவரே. நாங்கள் உம்முடையவர்கள், ஒரு நாள் சமாதானத்தோடு உம்மிடம் வருவோம் என்று எதிர்பார்க்கிறோம்.

211 இப்போது வியாதியஸ்தர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால், இன்று காலை அவர்கள் குணமாவார்களாக.

நாங்கள் அவர்கள் மீது கைகளை வைத்து ஜெபிக்கும்போது, உமது கிருபையும் நித்திய ஆசீர்வாதங்களும் அவர்கள் மீது தங்குவதாக.

பரிசுத்த ஆவியானவர் வந்து, செய்யும்படி அவர் நியமித்த கிரியையைச் செய்வாராக. அதை அருளும் பிதாவே.

இயேசு கிறிஸ்துவின் மூலமாக, இந்த ஆசீர்வாதத்தைக் கேட்கிறோம். ஆமென்.

212 நான் உங்களிடம் நேர்மையான உண்மையைச் சொல்லியிருக்கிறேன். தேவன் அதை வெளிப்படுத்தி, செய்தபடியே, நான் உங்களிடம் நேர்மையான உண்மையைச் சொல்லியிருக்கிறேன்.

இப்போது நான் உங்கள் ஜெபங்களை ஊக்கமாகத் தேடுகிறேன், விரும்புகிறேன். என்

வயதில், ஐம்பது வயதுள்ள ஒரு மனிதன் என்பதை நான் உணர்கிறேன்...

213 அன்றொருநாள் காலையில், நான் மனைவியிடம், "எனக்கு ஏற்கனவே ஐம்பது ஆகிவிட்டது, அன்பே. நான் கர்த்தருக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், நான் விரைந்து செய்ய வேண்டும்" என்று சொன்னேன்.

214 அவள், "பில், தேவன் மோசேயை எண்பது ஆண்டுகள் பயிற்றுவித்தார். உம்மிடமிருந்து ஒரு நாள் சேவையைப் பெற, அவரால் உம்மை இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பயிற்றுவிக்க முடியும். அவர் உமக்காக ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார், எனவே சும்மா இரும் (stand still)" என்றாள்.

"சும்மா இரும்" என்பது மிகுந்த ஞானம் என்று நான் நினைத்தேன்.

215 தேவன் ஒவ்வொரு கரத்தையும் தனது பெரிய திட்டத்தின்படியே அசைக்கிறார். சும்மா இருங்கள்.

முயற்சி செய்ய வேண்டாம்... தள்ள முயற்சி செய்ய வேண்டாம். நீங்கள் அவருக்கு முன்னால்

சென்றுவிடுவீர்கள். வழிநடத்துவதை விடப் பின்தொடர்வது மிகச் சிறந்தது, ஏனென்றால் அவரே தலைவர்.

216 இப்போது, எனது சிறிய சபைக்கு, மிகவும் உண்மையாக இருந்த, உலகம் முழுவதும் எனக்காக ஜெபித்த எனது சிறிய மந்தைக்கு.

உலகம் தழுவிய மற்றொரு அசைவு வருகிறது என்று நான் நம்புகிறேன். நான் உங்களிடம் சொன்ன இந்தக் காரியங்கள் உண்மை.

நியாயத்தீர்ப்பு நாளில், நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு உண்மையோ, அதே கதையுடன் நான் அங்கே உங்களைச் சந்திப்பேன்.

217 இப்போது, அது என்ன என்பதை உங்கள் அனைவராலும் பார்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். அது பரிசுத்த ஆவியின் மிகப்பெரிய, ஆழமான அபிஷேகத்தின் வருகை. அதற்குள் எப்படிச் செல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

தேவன் உங்களை அதற்குள் வைக்க வேண்டும் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

எனவே, உங்களால் முடிந்தவரை இனிமையாகவும், தாழ்மையாகவும், தேவனுக்கு நெருக்கமாகவும் வாழுங்கள். அவரைச் சந்தேகிக்காதீர்கள்.

உங்களுக்காக, எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்றும், எல்லாம் சரியாக நடக்கும் என்றும் விசுவாசியுங்கள். பார்த்தீர்களா?

218 நீங்கள் ஒரு ஆடு என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் புறா. புறா ஆட்டுக்குட்டியை வழிநடத்துகிறது. எப்போது... ஆட்டுக்குட்டிக்கும் புறாவுக்கும் ஒரே சுபாவம் உண்டு.

புறா பரலோகத்துப் பறவைகளிலேயே மிகவும் சாதுவானது.

ஆட்டுக்குட்டி பூமியின் மிருகங்களிலேயே மிகவும் சாதுவானது. எனவே, பார்த்தீர்களா, அவற்றின் ஆவிகள் ஒன்றுடன் ஒன்று ஒத்திருக்கும்.

இப்போது, புறா ஒரு ஓநாயின் மேல் வர முடியாது. பார்த்தீர்களா? அது அங்கே தங்காது. ஓநாய் ஒரு கொலைகாரன். ஆட்டுக்குட்டி சாதுவானது.

219 எனவே, பார்த்தீர்களா, அது ஆட்டுக்குட்டியும் புறாவும், ஒன்று மற்றொன்றை வழிநடத்துகிறது. புறா ஆட்டுக்குட்டியை எங்கே வழிநடத்தியது என்று பார்க்கிறீர்களா? சிலுவையில் அறையப்படுவதற்காகக் கல்வாரி வரை.

"அவர் தம்முடைய வாயைத் திறக்கவில்லை." அவர்கள் அவர்மேல் துப்பியபோது, அவர் திரும்பத் துப்பவில்லை.

அவர்கள் அவரை அறைந்தபோது, அவர் திரும்ப அறையவில்லை. அவர் தேவனுடைய மகிமைக்காக, தான் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறோம் என்பதை அறிந்து, அப்படியே தொடர்ந்து சென்றார்.

220 சகோதரி ஹாட்டி, நாங்கள் கிட்டத்தட்ட ஒரே வயதினர்தான். சகோதரர் ஜார்ஜ் ரைட் அங்கே, அவள் அப்பா, மற்றும் அவள் பையன்கள், அம்மா, ஷெல்பி.

221 நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஏன் எழுந்து வீட்டை விட்டு அவ்வளவு வேகமாக வெளியேறினேன் என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

நான் ஒருபோதும்... ஒரே நேரத்தில் முப்பதாயிரம் முரட்டு அந்நியர்கள் (raw heathens) இரட்சிக்கப்பட்ட இடத்தில் நான் இருந்திருக்கிறேன், தென் ஆப்பிரிக்கா, கிறிஸ்துவிடம் வந்தார்கள்.

நான் இதுவரை உணர்ந்ததிலேயே அதுதான் மிகப்பெரிய அபிஷேகம் என்று நினைத்தேன்.

மறுநாள் ஜார்ஜ் ரைட்டின் வீட்டில் நடந்ததோடு அது எந்த வகையிலும் ஒப்பிட முடியாது. அது போன்ற எதையும் நான் உணர்ந்ததே இல்லை.

முழு அறையும் தேவனுடைய மகிமையின் ஒளியாகத் தோன்றியது.

222 இப்போது, சகோதரி ஹாட்டி மிகவும் அமைதியான மற்றும் பக்திவிறைப்பான (pious) சிறிய பெண்மணி, எதற்கும் குரலை உயர்த்த மாட்டாள்.

ஆனால் பரிசுத்த ஆவி கட்டிடத்தைத் தாக்கியபோது அவள் அலறியதை, ஒரு நகரத் தெரு (city block) வரை உங்களால் கேட்டிருக்க முடியும். அனைவரும், அங்கிருந்த அனைவரும் அதை உணர்ந்தார்கள்.

அது அற்புதமாக இருந்தது. நாம் நீண்ட காலம் வாழலாம், ஆனால், சகோதரி ஹாட்டி, நம் மனதில் ஒரு நினைவு இருக்கும் வரை, நாங்களும் சகோதரி ரைட்டும் அதை நினைவில் கொள்வோம்.

223 இப்போது, நான் சொன்னது முற்றிலும் உண்மை என்பதை மக்கள் அறியும்படி, சகோதரி ஹாட்டி, உங்கள் கையை உயர்த்துவீர்களா, அப்போது, சகோதரி ரைட் மற்றும் நீங்கள் அனைவரும் அங்கே இருந்தீர்கள், அங்கே இருந்தீர்கள், நீங்கள் பார்க்க முடியும். பார்த்தீர்களா? அங்கே அவர்கள் இருக்கிறார்கள்.

224 இங்கே, எழுந்து நில்லுங்கள், சகோதரி ஹாட்டி. முதல் அற்புதம் நடந்த அந்தச் சிறிய விதவைப்பெண் அங்கே இருக்கிறார்.

உலக மக்கள் அனைவரையும் கடந்து, அந்த விஷயம் முதலில் நடப்பதற்கு, அங்கே மலைப்பகுதியில், தன் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக ஒரு நண்டு நிலத்தில் (crawfish ground) சோளப் பயிரை வளர்க்க முயற்சிக்கும் அந்த ஏழை, சிறிய, தாழ்மையான விதவைப் பெண்ணுக்கு.

இயேசு கிறிஸ்துவின் நாட்களுக்குப் பிறகு முதல் முறையாக, "நீ விரும்புவதைக் கேள்" என்று தேவன் கனம்பண்ணியது அவளைத்தான்.

225 நான் சொன்னேன், "கர்த்தருடைய நாமத்தில் யாரையும் நான் சவால் விடுகிறேன். அந்த ஆவி தாக்கி அப்படிச் சொல்லும்போது, நீங்கள் எதைக் கேட்டாலும் எனக்குக் கவலையில்லை, அது அருளப்படும்."

226 பெருஞ்செல்வந்தர்கள் (plutocrats) அல்லது அது போன்ற பெரிய மனிதர்களுக்கு அது ஏன் கிடைக்கவில்லை என்று உங்களுக்குத் தெரியுமா?

ஏனென்றால் அவர்கள் தங்களுக்குப் பிரயோஜனமில்லாத காரியங்களைக் கேட்பார்கள் என்று தேவனுக்குத் தெரியும்.

227 யார் சரியானதைக் கேட்பார்கள் என்று அவருக்குத் தெரியுமோ அவர்களுக்கு அவர் அதைக் கொடுக்கிறார். அந்தப் பெண் இன்னும் என்ன... இன்னும் என்ன?

அதை விடப் பெரியதாக அவள் கேட்கக்கூடிய எதையாவது என்னிடம் சொல்லுங்கள். அவள் அம்மாவும் அப்பாவும் இரட்சிக்கப்பட்டார்கள். அவள் தங்கை இரட்சிக்கப்பட்டாள்.

அந்தக் காலத்தில், இரண்டு பையன்களைத் தவிர, குடும்பத்தினர் அனைவரும் இரட்சிக்கப் பட்டார்கள். அவர்கள் இரட்சிக்கப் படவில்லை.

228 அவர்கள் ஏழை மக்கள். ஒரு நல்ல அறுவடைக்கு, தனது நிலையான வருமானம், வருடத்திற்கு அறுநூறு டாலர்கள் என்று ஷெல்பி என்னிடம் சொன்னார்.

பையன் என் வயதை அடையும் வரை வேலை செய்கிறான், எல்லாம் முடங்கிவிட்டது.

தன் அப்பா மற்றும் அம்மாவைக் கவனித்துக்கொண்டு வேலை செய்கிறான், அவர்கள் வயதானவர்கள், தன் சிறிய,

பாதிக்கப்பட்ட சகோதரியைக் கவனிக்க முயற்சிக்கிறான்.

ஆனால் அவர் இரட்சிக்கப்பட்டார். சகோதரர் ரைட், அவர்கள் அனைவரும், இரட்சிக்கப்பட்டார்கள்.

229 ஆனால் அந்த இருவரும் இரட்சிக்கப்படவில்லை. நித்தியம் இருக்கும் வரை, தன் குழந்தைகளின் இரட்சிப்பை ஹாட்டி கேட்டாள்.

அவள் பத்தாயிரம் டாலர்கள் கேட்டிருக்கலாம், அது கிடைத்திருக்கும். அவள் எதை விரும்பினாலும் கேட்டிருக்கலாம்.

ஆனால் அவர் அபிஷேகத்தை வைப்பதற்கு முன்பே, நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பது தேவனுக்குத் தெரியும். அது சரி.

230 சகோதரி ஹாட்டி, "நீ விரும்பும் எதையும் கேள். உன் இருதயம் விரும்பும் எதையும் கேள், ஹாட்டி" என்று நான் சொன்னது சரியா?

அது சரியா, சகோதரி ஹாட்டி? பார்த்தீர்களா? பார்த்தீர்களா? "நீ விரும்புவதைக்

கேள், அது என்னவாக இருந்தாலும் பரவாயில்லை. கேள். 'அவள் எதைக் கேட்டாலும் அதை மட்டும் சொல், அவள் அதைப் பெற்றுக்கொள்வாள்' என்று தேவன் என்னிடம் சொன்னார்." நான் சொன்னேன், "இப்போது கேள், நீ விரும்பும் எதையும்."

அவள் அதைச் செய்தாள்.

231 ஓ, சகோதரரே, சகோதரியே, நாம் வாழும் நாளை நீங்கள் உணருகிறீர்களா?

"நீங்கள் விரும்பும் எதையும் கேளுங்கள், அவர் அதை உங்களுக்குக் கொடுப்பார்" என்று பரலோகத்தின் தேவன் மனிதர்களுக்குக் கொடுக்கும் மிகவும் மகிமையான நேரம்.

ஹஹ்! இது—இது என் மனதிற்கு மிகவும் ஆழமானது. அது எனக்குத் தெரியும். ஆனால் என் இருதயத்தில், என்னால் முடிந்தவரை அதை அடக்கிக்கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

அது, அது வெறும்... நான் அதில் வாழ்ந்திருக்கிறேன். நான் அதில் வளர்ந்திருக்கிறேன். நான் அதில் மேற்கு நோக்கிச் செல்கிறேன். நான் அதில் கூட்டங்களுக்குள்

நுழைகிறேன். நான் அதில் வாழ்கிறேன். தேவனுடைய வார்த்தைகள் சரியானவை.

232 இப்போது, எனக்குத் தெரிந்த வரையில், நடக்க வேண்டிய கடைசி விஷயம் அதுதான்.

வேறு என்ன இருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை, மனிதர்களுக்குக் கொடுப்பதற்கு, "நீங்கள் விரும்பும் எதையும் கேளுங்கள், அது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. அதைக் கேளுங்கள், அது உங்களுக்குக் கொடுக்கப்படும்."

233 ஞானத்தை உங்களால் பார்க்க முடிகிறதா? அந்தப் பெண் கேட்கக்கூடிய மிகப்பெரிய காரியத்தைக் கேட்டாள் என்று எத்தனை பேர் நம்புகிறீர்கள்?

உங்களைப் பார்ப்போம். உங்களால் கற்பனை செய்ய முடியுமா? பாதிக்கப்பட்ட சகோதரியைக் கொண்ட ஒரு பெண், அவளுடைய சுகத்தைக் கேட்டிருக்கலாம்.

ஏழையாக இருக்கும் ஒரு பெண், அவளுடைய அம்மாவும் அப்பாவும் ஏழைகள், அவர்கள் அனைவரும் ஏழைகள், பணத்தைக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

அவள் தன் ஆயுளில் இன்னும் பல வருடங்களைக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

ஆனால் கேட்கக்கூடிய மிகப்பெரிய காரியத்தை, அதாவது இரட்சிக்கப்படாத தன் குடும்பத்தினரின் இரட்சிப்பை அவள் கேட்டாள், அது கிடைத்தது. ஆமென்.

அதுதான் முக்கியமான விஷயம். வாக்குத்தத்தத்தைக் கொடுத்த அதே தேவனால் அது கிடைத்தது. அவர் தேவன்.

ஓ, நான் அவரை எவ்வளவு நேசிக்கிறேன்!

234 இப்போது நாம் போகிறோம்... ஜெபிக்கப்பட வேண்டிய வியாதியஸ்தர்கள் யாராவது இங்கே இருக்கிறீர்களா? உங்கள் கையை உயர்த்துங்கள்.

சில இரவுகளுக்கு முன்பு ஒரு பெண் அழைத்தாள். கலிபோர்னியாவிலிருந்து மூன்று பேர் என்று நினைக்கிறேன், அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

"நாங்கள் இரண்டு மூன்று முறை வந்தோம், நீங்கள் ஜெப அட்டைகளைக் (prayer cards)

கொடுத்தீர்கள், எங்கள் எண்கள் அழைக்கப்படவில்லை" என்று சொன்னார்கள்.

அவள் தங்கியிருந்தால், இன்று காலை நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பேன் என்று அவளுக்கு வாக்குறுதி அளித்தேன்.

235 நாம் பகுத்துணருதல் (discernments) மற்றும் பலவற்றைக் கொண்டிருந்தபோது இங்கே எத்தனை பேர் இருந்திருக்கிறீர்கள்?

ஓ, நீங்கள் அனைவரும், எல்லோரும் இங்கே இருந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். பார்த்தீர்களா? அது உண்மை என்று நமக்குத் தெரியும். நாம் இப்போது அதைக் கடந்து செல்கிறோம்.

ஓ, தேவனுக்கு ஸ்தோத்திரம்! நாம் இப்போது அதைக் கடந்து செல்கிறோம். ஒருவேளை அது சம்பவிக்கலாம்... இன்று காலை தேவன் என்ன செய்வார் என்று எனக்குத் தெரியவில்லை.

236 ஆனால் வியாதியஸ்தர்களாகவும் பாதிக்கப்பட்டவர்காகவும் இருக்கும் உங்களை, ஒரு நேரத்தில் சிலராக வரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் மேலே வாருங்கள், அப்போது இந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்காக நாம் முதலில் ஜெபிக்கலாம்.

ஒருவேளை நான் அப்படிப் பிடிக்கலாம். இங்கே மேலே வாருங்கள் சகோதரி. இங்கே வரிசையில் நில்லுங்கள்.

ஏனென்றால் எங்களிடம் இல்லை... அவர்கள் அதே இடத்திற்குத் திரும்பச் செல்ல வேண்டியிருப்பதால், அதே வரிசையின் வழியாக அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும்.

237 இந்தச் சிறிய மனிதர் பேசிய விதத்திலிருந்து என்னால் சொல்ல முடியும், அவர் தெய்வீக சுகத்தை விசுவாசிக்கிறார் என்று எனக்குத் தெரியும், மேலும் தேவனுடைய வல்லமையை விசுவாசிக்கிறார்.

தேவன் வியாதியஸ்தர்களைக் குணமாக்குகிறார் என்று நம்பும் ஒரு ஊழியர், இன்று காலை இங்கே இருக்கிறாரா?

அப்படி இருந்தால், அவர் இங்கே மேலே வரட்டும், ஒவ்வொருவரும்.

இந்த வியாதியஸ்தர்களுக்காகவும் பாதிக்கப் பட்டவர்களுக்காகவும் நாங்கள் ஜெபிக்கும் போது, நீங்கள் அனைவரும் இங்கே வந்து எங்களுடன் நில்லுங்கள், தேவன் வியாதியஸ்தர்களைக் குணமாக்குகிறார் என்று நம்பும் சகோதரர்கள் யாராவது.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஐயா, நேராக வாருங்கள், நீங்கள் எங்களுடன் இங்கே இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

238 இப்போது பரிசுத்த ஆவியானவர் என்ன செய்வார் என்று எங்களுக்குத் தெரியாது.

மறுநாள் சகோதரி ரைட்டின் வீட்டில் செய்ததைப் போலவே பரிசுத்த ஆவியானவர் இந்த நேரத்தில் செயல்படலாம். அவர் செய்வார் என்று நான் நம்புகிறேன். எனக்குத் தெரியாது. உங்களுக்குப் புரிகிறதா? எத்தனை பேருக்குத் தெரியும்...?

தரிசனங்கள் முதன்முதலில் தொடங்கிய போது இருந்த உங்களில் பலர் இங்கே இல்லை.

அவை எந்த நேரத்தில் வரும், அவை என்ன செய்யும் என்று எனக்குத் தெரியாது. அனைத்தும்

தேவனுடைய சித்தத்தில் உள்ளன, தேவனால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

எத்தனை பேருக்கு அது தெரியும்? தேவன் மனிதர்களுக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் விஷயங்களைக் கொடுக்க முடியாது.

அவர்கள் அப்படிச் செய்தால், பார்த்தீர்களா, அது தேவனாக இருக்காது. அது தேவனாக இருக்காது.

அது... நண்பர்களே, இந்தத் தாழ்மையான இடத்தில் நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் கர்த்தர் எங்களை எந்தச் சந்தேகத்திற்கும் இடமின்றி முழுமையாக ஆசீர்வதித்து, அவர் செய்வேன் என்று வாக்குத்தத்தம் செய்ததை அப்படியே செய்துமுடித்திருக்கிறார்.

239 புலன் கடந்த உணர்வை (supersensory perception) பற்றி எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? உங்களில் பலர். இது—இது புராணக்கதை, ஆவியுலகக் கோட்பாடு (spiritualism) என்பதைத் தவிர வேறில்லை.

ஆனால், உங்களுக்குத் தெரியும், அவர்களால் முடியாது... அந்த விஷயங்கள் நீடிக்காது. அவை நிலைத்திருக்காது. அவர்களால் ஒருபோதும் எந்தப் பொருளையும் பெற முடியாது.

அவர்கள் அங்கே உட்கார்ந்து... "அங்கே ஒரு ஆவி இருக்கிறது. அங்கே ஒரு ஆவி இருக்கிறது" என்று சொல்வார்கள்.

அவர்கள் அதைப்படம் எடுக்க முயற்சிப்பார்கள், அல்லது ஏதாவது செய்வார்கள். அவர்களால் அதைச் செய்ய முடியாது. பார்த்தீர்களா? அது அங்கே இல்லை.

அது மனோவியல் (psychic), மன ரீதியானது. பார்த்தீர்களா?

ஆனால் தேவன் செய்வது பூரணமானது.

240 மோசே தன் கோலைப் கீழே போட்டபோது, மந்திரவாதியும் தன் கோலைப் போட்டான்.

இரண்டும் பாம்புகளாக மாறின. அது சரியா? ஆனால் எந்நே (Jannes) மற்றும்

யம்பிரேவின் (Jambres) கோலுக்கு என்ன நடந்தது?

மோசேயின் கோல் அதை விழுங்கியது. மோசே தன் கோலை எடுத்தபோது, அது ஒரு கோலாகவே இருந்தது. ஆனால் அவர்கள் கோல் எங்கே?

மோசேயின் கோலுக்குள். பார்த்தீர்களா? உங்களால் அதைப் பார்க்க முடியவில்லை. தேவன் எதையாவது செய்யும்போது, அவர் அதை உண்மையானதாக்குகிறார்.

241 இப்போது அவர்கள் என்னிடம், "பரிசுத்த ஆவி, உங்களுக்குத் தெரியும், அது மக்கள் சும்மா உணர்ச்சிவசப்படுவது. அது மன ரீதியானது. அந்தத் தரிசனங்கள் மற்றும் காரியங்கள், அது வெறும் மனத் தந்தி (mental telepathy)" என்று சொல்கிறார்கள்.

242 ஜார்ஜ் ஜே. லேசி அந்தப் படத்தை ஆய்வு செய்தபோது, அந்த கர்த்தருடைய தூதனை, ஆற்றில் நீங்கள் பலர் இங்கே நின்று பார்த்தீர்கள், பல முறை, அவர், "சகோதரர் பிரான்ஹாம், இந்தக் கேமராவின் இயந்திரக் கண் (mechanical eye) உளவியலைப்

(psychology) படம் பிடிக்காது" என்று சொன்னார்.

"ஒளி அங்கே இருந்தது. அதோ இருக்கிறது" என்றார். அது நித்தியமானது. அது உண்மை. எனவே, பார்த்தீர்களா, அது அதே தேவனுடைய தூதன்.

இப்போது அதைக் கவனியுங்கள். அதன் சுபாவம் அதை நிரூபிக்கிறது.

243 அவர் பூமியில் இருந்தபோது, வெளிப்படுத்தப்பட்ட தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் அது வாசம்பண்ணியது.

இப்போது இயேசு, "இன்னும் கொஞ்சக் காலத்தில் உலகம் என்னைக் காணாது, ஆனாலும் நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடன், உங்களுக்குள்ளும் இருப்பேன். நான் செய்கிற காரியங்களை நீங்களும் செய்வீர்கள்" என்று சொன்னார்.

244 இப்போது அது வரும்போது அதைக் கவனியுங்கள். ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், ஆனால்

தேவன் அதை ஆதரிக்கும்போது, அது அதை உண்மையாக்குகிறது.

இப்போது அந்தத் தூதரின் சுபாவத்தைக் கவனியுங்கள். அவர் ஒரு நபரைத் தமக்கு அவ்வளவாய் அடிபணிய வைக்கும்போது, இயேசு பூமியில் இருந்தபோது செய்த அதே காரியத்தை அவர் செய்கிறார்.

ஏனென்றால், நாம் அவருடைய ஆவியினால் பிறந்திருந்தால், நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக இருக்கிறோம். பார்த்தீர்களா? அது எந்தப் புராண விஷயமும் இல்லை.

அதை நிரூபிக்க அதற்கு ஆதாரம் உள்ளது. அது சரியானது என்பதை அது காட்டுகிறது. எனவே நமது இரட்சிப்பு முற்றிலும் பூரணமானது.

245 கர்த்தராகிய இயேசுவின் வருகையைப் பற்றிப் பேச எல்லாத் தீர்க்கதரிசிகளையும் கொண்டிருந்த பரலோகத்தின் தேவன், இயேசு வந்தபோது, அவர் ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றினார், அவற்றில் பல சிலுவையில் நிறைவேற்றப்பட்டன, "நம்முடைய மீறுதல்களுக்காக அவர் காயப்படுத்தப்பட்டார்,"

தாவீது சொன்னது, "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"

ஆனால் தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பும்போது, ஒரு தீர்க்கதரிசி பேசும்போது, அது தேவனாக இருந்தால், தேவன் அதை உண்மையாக்குகிறார்.

அவர்களை அறிந்துகொள்வதற்கு, அங்கே தான் அவர் சொன்னார். "அவர்கள் பேசி, அவர்கள் சொன்னது நடந்தால், அவர்களை நம்புங்கள், ஏனென்றால் நான் அவர்களுடன் இருக்கிறேன்; அது நடக்கவில்லை என்றால், அவர்கள்—அவர்கள் இல்லை. அவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகள்."

"ஆனால், அவர்களைக் குறிக்க, அவை நடக்கிறதா என்று பாருங்கள்" என்று அவர் சொன்னார்.

246 இப்போது பாருங்கள்.

பரிசுத்த தீர்க்கதரிசியில் பேசிய தேவன், மேசியாவின் வருகையைப் பற்றி, தேவனுடைய மகிமைக்காகவும் கனத்திற்காகவும் பேசினார் என்றால்.

247 அடுத்த இலையுதிர் காலத்தில் யார் ஜனாதிபதியாக இருப்பார்கள் என்று எனக்குத் தெரிந்து, அதைச் சொன்னால், அது தீர்க்கதரிசனமாக இருக்கும். அது உண்மை.

ஆனால் தேவன் அப்படித் தீர்க்கதரிசனம் சொல்வதில்லை, சும்மா, ஓ, சும்மா விளையாடுவதற்கு. அவரை மகிமைப்படுத்தவே தேவன் ஏதோ ஒன்றைச் செய்கிறார். பார்த்தீர்களா?

ஆனால் மேசியா வந்தபோது, மேசியா சென்றபோது...

248 மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பைடீரியன், கத்தோலிக்கர், லூத்தரன், பெந்தெகொஸ்தே, நசரேன், பில்கிரிம் ஹோலினஸ் (Pilgrim Holiness), நீங்கள் அனைவரிடமும் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

தீர்க்கதரிசிகளின் ராஜாவாகிய இயேசுவுக்கு, அவருடைய சொந்தச் சபையை எப்படி அமைப்பது என்று தெரிந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

எல்லாத் தீர்க்கதரிசிகளும் அவரைப் பற்றிப் பேசி, அவரைச் சுட்டிக்காட்டினார்களானால், அவர் எப்படிப்பட்ட சபையை அமைத்தார்?

அவர் சென்றபோது, அவர் சொன்னார்... அவர் பூமியில் இருந்தபோது, பேதுருவிடம், "தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாட்டின் பேரில்," அவர் சொன்னார், "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை."

அது சரிதானே? சரி. அவர் இருந்தபோது...

249 அவர் செல்வதற்கு முன், மாற்கு 16-ல், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையா ளங்களாவன" என்று சொன்னார்.

அவர் அதைச் சொன்னாரா? "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள், சாவுக்கேதுவான எதைக் குடித்தாலும்."

"நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்" என்றும் அவர் சொன்னார். அது சரிதானே?

அதுதான் அவருடைய சபையைப் பின் தொடர வேண்டிய அடையாளங்கள். அது ஒரு சபைப்பிரிவு (denomination) அல்ல.

இது தேவனால் நியமிக்கப்பட்ட, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட, எல்லாச் சபைப் பிரிவுகளிலிருந்தும் வெளியே வரும் பரலோகத்தில் பிறந்த சபை, ஒரு உண்மையான விசுவாசமுள்ள மக்கள் கூட்டம்.

250 இங்கே நிற்கும் இந்த ஊழியர்கள் என்னுடன் இருக்கிறார்கள். நாங்கள் மனிதர்கள். அவர் தேவன், ஆனால் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்த நாங்கள் இங்கே இருக்கிறோம்.

நாங்கள்... இந்தக் வேலையைச் செய்ய, வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைக்கத் தேவன் எங்களை அனுப்பியிருக்கிறார் என்று உங்களிடம் சொல்ல நாங்கள் இங்கே இருக்கிறோம்.

"இந்த அடையாளங்கள் பின்தொடரும்." அந்த அடையாளங்கள், அவர் பேசிய அனைத்து அடையாளங்களும் விசுவாசியைப் பின் தொடரும். இதோ அவை, பின்தொடர்கின்றன.

அவை பின்தொடர்கின்றன.

251 தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல. அவர் ஹாட்டிக்குச் செய்ததை, உங்களுக்கும் செய்வார்.

பார்வையற்றவர்களுக்கு அவர் செய்ததை, பார்வையற்ற உங்களுக்கும் செய்வார். செவிடர்களுக்கு அவர் என்ன செய்கிறாரோ, அதை உங்களுக்கும் செய்வார்.

அவர் வேறு யாருக்காவது செய்த எதையும், நீங்கள் விசுவாசித்தால் மட்டுமே, அவர் உங்களுக்கும் செய்வார். அது சரிதானே?

இப்போது, சகோதரர் டெடி, நீங்கள் 'ஒன்லி பிலீவ்' (Only Believe - விசுவாசித்தால் கூடும்) வாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

252 இந்த மக்கள் வரிசையில் கடந்து செல்லும்போது, நாம் மறுபக்கத்தைப் பெறுவோம்.

நாங்கள் உங்கள் மேல் கைகளை வைத்து, உங்கள் வியாதிகள் குணமாக வேண்டும் என்று உங்களுக்காக ஜெபித்துக்கொண்டு, நாங்கள் அனைவரும் வரப்போகிறோம்.

அது முடியும். அது இருக்கும். தேவன் என்ன செய்யப் போகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் நான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன்.

நான் செய்வதாக ஒருவருக்கு வாக்குறுதி அளித்ததின்படி வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப் போகிறேன்.

இதற்காக ஜெபிக்கிறேன்...

253 கடந்த ஞாயிறு, நினைவிருக்கிறதா, நான் சொன்னேன். கடந்த ஞாயிறு வெளிப்பாடுகள் மற்றும் பல இருந்தன.

இந்த ஞாயிறு நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பேன்.

நாம் இப்போது ஜெபிப்போம்.

254 ஆண்டவரே, நாங்கள் உமது ஊழியர்களாக இங்கே நிற்கிறோம். நாங்கள் உமது மக்களுக்கு முன்பாக நிற்கிறோம். நாங்கள் இங்கே இருக்கிறோம். நீர் என்ன

செய்வீர் என்று எங்களுக்குத் தெரியாது. நீர் பாஷையில் பேசலாம்.

நீர் வியாக்கியானம் செய்யலாம். நீர் ஒரு தரிசனத்தைக் கொடுக்கலாம். ஒரு வெளிப்பாட்டிற்காக ஒருவருடைய கையை நான் பிடிக்கும்படி நீர் செய்யலாம்.

நீர் பேசி, "நீ விரும்புவதைச் சொல்" என்று அதிகாரத்தைக் கொடுக்கலாம். நீர் என்ன செய்யப் போகிறீர் என்று எனக்குத் தெரியாது, ஆண்டவரே.

ஒருவேளை நாங்கள் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைக்க வேண்டும் என்று நீர் விரும்பலாம். அது என்னவென்று எங்களுக்குத் தெரியாது.

நாங்கள் உம்மைப் பிரியப்படுத்த விரும்புகிறோம், ஆண்டவரே. உமது ஊழியர்களாக நாங்கள் இங்கே நின்று கொண்டிருக்கிறோம்.

இவர்கள் உமது மக்கள், உமது வார்த்தை சொல்வதின்படி அவர்களுக்கு உதவ நாங்கள் முயற்சிக்கிறோம்.

நாங்கள் உமது அறிவுறுத்தலைப் பின்பற்ற முயற்சிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே மக்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்குத் தேவையானதை நீர் எங்களுக்குத் தரும்படி நான் உம்மை வேண்டிக்கொள்கிறேன். ஆமென்.

255 மற்ற அனைவரும் உங்கள் தலையைத் தாழ்த்தி ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சகோதரர் வுட், நீங்கள்...

256 ஊழியக்கார சகோதரர்களே, நாம் இங்கே நிற்கலாம் என்று நான் நம்புகிறேன். எத்தனை பேர் இருக்கிறார்கள்?

இங்கே நான்கு பேரா? சரி. அங்கே ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு பேர், நான் இங்கே வரிசையின் தலைமையில், இங்கே நிற்கிறேன்.

பார்த்தீர்களா? ஒரு கணம். இப்போது, சுற்றிலும், இங்கே வாருங்கள், சகோதரரே, அன்பானவரே.

இப்போது, அதுதான், அங்கே நேராக நில்லுங்கள், அவர்கள் கடந்து செல்லும்போது.

சபை மக்கள் அனைவரும்... இப்போது, சிறு பையன்களே, நீங்கள் கொஞ்சம் பின்னால் நகர்ந்தால், அவர்கள் நடந்து செல்ல முடியும்.

257 இப்போது, நாம் அனைவரும் ஜெபிக்கும்போது, உங்கள் இருக்கைகளுக்கு நேராகச் செல்லுங்கள்.

சில நிமிடங்களில், நான் மறுபக்கத்தில் உள்ளவர்களை அழைப்பேன்.

258 இப்போது, நீங்கள் ஒவ்வொருவரும், ஊழியர்கள் மட்டுமல்ல, நீங்கள் அனைவரும் இவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் வேறொருவருக்காக ஜெபிக்கும்போது தேவன் உங்களுக்காக என்ன செய்வார் என்று உங்களுக்குத் தெரியாது.

நீங்கள் சரியானதைச் சொன்னால் என்ன செய்வது? இங்கே ஒரு பெண் நிற்கிறாள், அவள் மிகவும் வியாதியாய் இருப்பதால் அவர்கள் அவளைத் தாங்கிப் பிடிக்க வேண்டியிருக்கிறது.

பேங்க்ஸ் சரியானதைச் சொன்னது போல, ஹாட்டி சரியானதைச் சொன்னது போல,

உங்கள் ஜெபம் சரியானதாக இருந்தால் என்ன செய்வது?

தேவன் இறங்கி வந்து ஏதோ ஒன்றைச் செய்யும்படி உங்கள் ஜெபம் சரியானதைச் சொன்னால் என்ன செய்வது? பார்த்தீர்களா, இது ஒரு நபர் மட்டுமல்ல. இது ஜீவனுள்ள தேவனுடைய சபை, அனைவரும். பார்த்தீர்களா?

இப்போது, எல்லோரும் ஜெபத்தில் இருங்கள்.

259 இப்போது, இதுதானா? சகோதரர் பேங்க்ஸ், நீங்கள் மக்களைக் கொண்டு வாருங்கள்.

யாராவது இங்கே உள்ளே நில்லுங்கள். உதவிக்காரர்களில் (ushers) ஒருவர் எங்கே? சகோதரர் பர்ட், நீங்கள் அவர்களுக்கு உதவுங்கள்.

சகோதரர் பேங்க்ஸ், நீங்கள் இங்கே வாருங்கள், இங்கே.

நாம் ஜெபிப்போம்.

*கர்த்தராகிய இயேசுவே... [ஒலி நாடாவில் காலியிடம்]...?...*

260 *ஆம், இப்போது அவர்களைக் கொண்டு வாருங்கள்.*

*நாங்கள் அவர்கள் மேல் கைகளை வைக்கும்போது அவர்கள் குணமா வார்களாக!...?...*

*நேராக வாருங்கள்.*

*நீங்கள் ஒவ்வொருவரும், இப்போது ஜெபியுங்கள்!...?...*

261 *இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே...?...இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, நாங்கள் கைகளை வைக்கிறோம்...?...*

*நாங்கள் மிகவும் மகிழ்ச்சிய டைகிறோம்...?...[ஒலி நாடாவில் காலி யிடம்]...?...*

262 *பல்வேறு இடங்களில் உள்ள வியாதியஸ்தர்களையும் பாதிக்கப்பட்டவர் களையும் குணமாக்கும்.*

அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்களாக, பிதாவே, தேவனுக்கே கனமும் மகிமையும் உண்டாவதாக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

263 (இப்போது உறுதிப் படுத்துங்கள்... ?...அப்போது நீங்கள் தயாராக இருப்பீர்கள், அப்படித்தானே?) சரி. என்றால்...

264 கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரரே.

[அந்தச் சகோதரர், "கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரர் பிரான்ஹாம், நான் ஸ்வீட் ஹோம், ஒரிகானைச் சேர்ந்தவன்" என்று சொல்கிறார்] சரி, ஒரிகானிலிருந்து.

["நாங்கள் உங்களைச் சந்திப்போம்..."] சான் ஜோஸ். ["சான் ஜோஸ். நாங்கள் அங்கே செல்கிறோம்."] சரி, அற்புதம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இது மிகப்பெரிய கூட்டங்களில் ஒன்றாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்—நம்புகிறேன்.

["அது இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும். தேவன் அங்கே இருந்தால், அது அப்படித்தான் இருக்க வேண்டும்."] நன்றி—நன்றி—நன்றி, என் சகோதரரே. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

265 இது பரலோகம் போல இல்லையா? சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது, ஆத்துமாக்கள் கிறிஸ்துவை நோக்கிக் கைகளை உயர்த்துவது, வியாதியஸ்தர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் வரிசையில் கடந்து செல்வது, ஞானஸ்நான ஆராதனைகள், ஐக்கியம், சகோதரத்துவம் ஆகியவற்றை நீங்கள் நினைத்துப் பார்க்கும்போது, இது பூமியில் இறங்கி வந்த பரலோகத்தின் ஒரு சிறிய பகுதி.

உங்களுக்குத் தெரியும், நாம்... அப்போஸ்தலன் அந்த நேரத்தில், "நாம் இங்கே இருப்பது நல்லது" என்று சொன்னது போல் நான் உணர்கிறேன்.

நம்மால் முடிந்தால்... நமக்கு ஒரே ஒரு கூடாரம்தான் தேவை. ஆனால் தேவனுடைய சேவைக்காக இங்கே இருக்க நாம் விரும்புகிறோம்.

266 இப்போது, இன்று காலை வரிசையில் வந்த நீங்கள் ஒவ்வொருவரும், ஜெபிக்கப் பட்டவர்கள், நாடு முழுவதும் நீங்கள் கேள்விப்பட்ட இந்த காரியங்கள் அனைத்தையும் அருளின அதே தேவன், அவை உண்மை, அவை எவ்வளவு உண்மையாக இருக்க முடியுமோ அவ்வளவு உண்மை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மேலும் இங்கே உள்ள இந்த ஊழியர்கள், மற்றும் அவர்களின் ஊழியத்தில் என்ன செய்யப்பட்டது, கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தில் என்ன செய்யப்பட்டது, நாங்கள் இங்கே உண்மையாக, முழு இருதயத்துடனும் நின்று, ஜெபித்து, இயேசு சொன்னபடியே உங்கள் மேல் கைகளை வைத்தோம்.

"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையா ளங்களாவன. அவர்கள் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." இப்போது அது... அது நடக்காமல் இருக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, நீங்கள் அதை விசுவாசிக்காமல் இருப்பதுதான் அது.

267 "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று இயேசு சொன்னார்.

"விருப்பமுள்ளவன் எவனோ அவன் வரக்கடவன்." இப்போது நீங்கள் அதைத் தவறவிட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. தேவனுடைய வார்த்தை உண்மையானது. நீங்கள் அதைத் தவறவிட ஒரே வழி, வராமல் இருப்பதுதான். அது சரிதானே? நீங்கள் அதைத் தவறவிடும் வழி அதுதான்.

268 "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்று தேவன் சொன்னார்.

"அவர்கள் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." நீங்கள் அதைத் தவறவிட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, அதை விசுவாசிக்காமல் இருப்பதுதான் அது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால், தேவன் தனது வார்த்தையைக் காத்துக்கொள்வார். நீங்கள் பார்க்கிறீர்களா, அதற்கு... அது...

269 அது முதல், ஆரம்பம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும் வழி அதுதான். அவர்களைக் கடந்து செல்லவிடுங்கள், அவர்கள் மேல் கைகளை வையுங்கள், அவர்களை அபிஷேகம் பண்ணுங்கள், அல்லது தேவன் சொன்ன எதையும் செய்யுங்கள். ஆனால் இவை அனைத்திற்கும் பிறகு, அவர் தம் மக்களின் நடுவில் இருக்கிறார் என்பதைத் தேவன் உங்களுக்குத் தெரியப்படுத்த, அவர் அடையாளங்களையும் அற்புதங்களையும் காட்டுகிறார். மேலும், பார்த்தீர்களா, அவர் செய்யும் காரியங்களைச் செய்வது ஜீவனுள்ள தேவனுடைய அற்புதங்களும் அதிசயங்களும் தான். இப்போது,

அவர் அற்புதமானவர். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா?

270 இப்போது சகோதரர்கள், அங்கே உள்ளே, ஞானஸ்நான ஆராதனைக்கு ஆயத்தம் செய்கிறார்கள். அது விரைவாக இருக்கும். இப்போது, ஞானஸ்நானம் பெறவிருப்பவர்கள், பெண்கள் அறைக்குச் செல்லுங்கள். அது சரிதானே, பெண்கள் அங்கே? பெண்கள் இங்கே, ஆண்கள் இந்தப் பக்கத்தில்.

271 ஞானஸ்நான ஆராதனைக்குத் தயாராகும்போது, அடுத்த சில நிமிடங்களில், நான் ஒரு வேதவசனத்தை வாசிக்க விரும்புகிறேன். நாம் இருப்போம்...

272 நின்று கொண்டிருப்பதால் உங்களில் சிலருடைய கால்கள் வலிக்கக்கூடும் என்று எனக்குத் தெரியும்.

நீங்கள் இன்னும் சில நிமிடங்கள் நிற்க முடிந்தால், இவர்கள் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதைப் பார்க்கும்போது ஒரு அழகான காட்சியை நீங்கள் காண்பீர்கள்.

273 அவர்கள் ஞானஸ்நானத்திற்குத் தயாராகும்போது அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் உள்ள சில வேதவசனங்களை இப்போது வாசிக்க விரும்புகிறேன்.

ஞானஸ்நானம் பெற சுமார் இரண்டு அல்லது மூன்று பேர் மட்டுமே இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்; ஒரு கணம் மட்டுமே ஆகும்.

இப்போது நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

*அப்போஸ்தலர் 2, 28-ம் வசனத்திலிருந்து வாசிக்க ஆரம்பிக்கிறேன்.*

**ஜீவமார்க்கத்தை - ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்,** *(இது பன்மையில் உள்ளது)*; **உமது சன்னிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர்.**

**சகோதரரே, கோத்திரபிதாவாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுக்குத் தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலே இருக்கிறது.**

**அவன் தீர்க்கதரிசியாயிருந்து,...**

*274 தாவீது ஒரு தீர்க்கதரிசி என்று எத்தனை பேருக்குத் தெரியும்? நிச்சயமாக. அவர் ஒரு சங்கீதக்காரர் மற்றும் தீர்க்கதரிசி.*

**தன்னுடைய இடுப்பின் கனியாகிய கிறிஸ்துவை, மாம்சத்தின்படி, அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கப்பண்ணும்படி தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்து,**

**அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லை என்றும்,**

அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை என்றும் முன்னறிந்து, அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிப் பேசினான்.

இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

275 இது இன்றைக்குப் பொருந்துகிறது போல் இல்லையா?

இந்தக் காரியங்களுக்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். இன்று காலை, "ஹாட்டி, மற்றவர்கள், இந்தக் காரியங்களுக்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்று என்னால் சொல்ல முடியும்.

அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் உயர்த்தப்பட்டு, பிதா அருளிய பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.

தாவீது பரலோகத்திற்கு ஏறினதில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்,

நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான்.

276 *அந்தப் பெரிய மனிதர்கள், தீர்க்கதரிசிகளைப் பற்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை நாம் எப்படிப் பேசினோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா, அவர்கள் எப்படி மரிக்க வேண்டியிருந்தது?*

*ஆனால் ஒருவர் வந்தார், அந்த ராஜ வித்து!*

...என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்,

நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்.

ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.

இதை அவர்கள் கேட்டபொழுது *(இயேசு ஆண்டவரும் கிறிஸ்துவுமாக இருந்தார் என்று);*

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும்

மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்றான்.

இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடான இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான்.

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத் திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குத

லிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அநேக அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ் தலர்களாலே செய்யப்பட்டது.

விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்துக்கொண்டார்கள்.

காணிபூமிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளுக்குப் பகிர்ந்துகொடுத்தார்கள்.

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவால யத்திலே அநுத்தினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,

தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுத்தினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்.

277 *இப்போது அவர்கள் தண்ணீருக்கு வரும்போது... அவர் தண்ணீருக்குள் செல்லும்போது எனக்குத் தெரியப்படுத்துங்கள்.*

278 தேவனிடத்தில் சர்வ அதிகாரமுள்ள (sovereign) கிருபை ஆளுகை செய்கிறது என்பதை நீங்கள் அறியும்படி, நான் பின்னோக்கிச் செல்ல விரும்புகிறேன்.

நான் வேறொன்றையும் இதில் வைக்காமல் இருக்க முடியவில்லை. அந்தப் பெண்ணின் குழந்தைகள், இரட்சிக்கப்பட்ட அந்த இரண்டு பையன்களை, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் அறிந்திருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

மேலும் உலகத் தோற்றத்திற்கு முன்பே அவர்களுடைய பெயர்கள் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் வைக்கப் பட்டிருந்தன. வேதம் அதைச் சொல்கிறது.

அது இந்த நிமிடம் வரை செயல்பட வேண்டியிருந்தது.

279 உலகம் தோன்றுவதற்குப் பத்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, நாம் இங்கே நின்று கொண்டிருப்போம் என்பதை தேவன் அறிந்திருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இன்று காலை நாம் இங்கே நின்று கொண்டிருப்போம் என்பது அவருக்குத்

தெரியும். ஒவ்வொரு ஈ, ஒவ்வொரு கொசு, அவை எப்போது கண்களை இமைக்கும், அவை எவ்வளவு கொழுப்பை (tallow) உற்பத்தி செய்யும் என்பதைத் தேவனுடைய எல்லையற்ற தன்மை (infinity) அறிந்திருந்தது.

உலகம் உருவாக்கப்படுவதற்கு முன்பே, தேவனுக்கு அது தெரியும்.

280 இப்போது, "சரி, அவருக்குத் தெரிந்தால், பிறகு ஏன் நீங்கள் பிரசங்கிக்கிறீர்கள்?" என்று நீங்கள் சொல்வீர்கள்.

281 அது தேவன், தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி. பிரசங்கிப்பது அவருடைய திட்டம்.

அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்த போது... அவர் அறுவடையைப் பார்த்தார்.

"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று அவர் சொன்னார்.

எத்தனை பேருக்கு அது நினைவிருக்கிறது? சரி, அறுப்புக்கு எஜமான் அங்கே நின்று, அது

செய்யப்படும் என்று அறிந்திருந்தால், அறுப்புக்கு வேலையாட்களைத் தனது அறுப்புக்கு அனுப்பும்படி அவர்கள் ஏன் அறுப்புக்கு எஜமானிடம் ஜெபிக்க வேண்டும்?

ஏன்? தேவன் அதை அப்படி ஏற்பாடு செய்திருக்கிறார், அவருடைய... இப்போது இதைக் கேளுங்கள்.

நீங்களும் நானும் இல்லாமல் தனது திட்டம் நகர முடியாதபடி தேவன் அதை அப்படி ஏற்பாடு செய்திருக்கிறார். தேவன் நம்மை எதைச் செய்ய வழிநடத்துகிறாரோ அதை நாம் செய்யாதவரை, நாம் அவருடைய திட்டத்தை முடக்குகிறோம்.

ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் சபை நகரும்போது, நாம் தேவனுடைய சித்தத்தில் இருக்கிறோம், அவருடைய திட்டத்தைச் செய்கிறோம். ஓ!

கலிபோர்னியாவிலிருந்து நான் திரும்பிய உடனே, கர்த்தருக்குச் சித்தமானால்...

282 பிரான்ஹாம் கூடாரத்திற்குத் தேவை ஒரு எழுப்புதல். ஆமென்.

அவர்களுக்கு ஒரு எழுப்புதல் மற்றும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் தேவை. இப்போது அதுதான் கூடாரத்தின் பெரிய தேவை.

உலகின் மிகச்சிறந்த மக்களில் சிலர் இங்கே வருகிறார்கள், ஆனால் நமக்குத் தேவையானது பரிசுத்த ஆவி ஞானஸ்நானம்.

நான் அதை உணர்கிறேன், அதைச் சொல்ல முடியும். நாங்கள் திரும்பி வந்த உடனேயே, கர்த்தருக்குச் சித்தமானால், அந்தக் காரணத்திற்காகவே நாங்கள் ஒரு எழுப்புதலை நடத்தப் போகிறோம், மக்கள் பரிசுத்த ஆவியைத் தேடிக்கொண்டிருக்கும் இந்தக் கூடாரத்தின் உறுப்பினர்கள் உள்ளே வந்து, அறிவுறுத்தல்கள் மற்றும் எல்லாவற்றையும் பெறலாம்.

சபை மீண்டும் தேவனுடைய சித்தத்திற்குள் வந்து, தேவனுடைய திட்டம் நகரும்போது அதனுடன் முன்னேறும்படி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள இங்கே ஜெபக் கூட்டங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. அவர்கள் இப்போது குளத்தில் தயாராக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

283 நீங்கள் இதை ஏற்று நடத்துங்கள், நான் உள்ளே சென்று அவர்களுடன் ஜெபிக்கிறேன் ...?...